$$= \underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{1}{x} - \frac{\cos x}{\sin x}\right) = \underset{x \to 0}{\text{Lt}} \frac{\sin x - x \cos x}{x \sin x}$$

$$\text{வகை } \frac{0}{0}$$

$$= \underset{x \to 0}{\text{Lt}} \frac{\cos x - \cos x + \sin x}{\sin x + x \cos x}$$

$$= \underset{x \to 0}{\text{Lt}} \frac{x \sin x}{\sin x + x \cos x} \qquad \text{வகை } \frac{0}{0}$$

$$= \underset{x \to 0}{\text{Lt}} \frac{\sin x + x \cos x}{\cos x - x \sin x + \cos x}$$

$$= \frac{0}{2}$$

$$= 0.$$

பயிற்சிகள் 24.

பின் வருவனவற்றின் மதிப்பைக் காண்க:

1. $\underset{x \to n}{\text{Lt}} \; (x - n) \cot \pi x$

2. $\underset{x \to n}{\text{Lt}} \; (x - n) \operatorname{cosec} \pi x.$

3. $\underset{x \to a}{\text{Lt}} \; \log \left(2 - \frac{x}{a}\right) \cot (x - a)$

4. $\underset{x \to 1}{\text{Lt}} \; \tan^2 \left(\frac{\pi}{2} x^2\right)(1 + \sec \pi x)$

5. $\underset{x \to \infty}{\text{Lt}} \; x \tan \frac{1}{x}$

6. $\underset{x \to 0}{\text{Lt}} \; x \log x$

7. $\underset{x \to \frac{\pi}{2}}{\text{Lt}} \; (\sec x - \tan x)$

8. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{1}{x^2} - \cot^2 x\right)$

9. $\underset{x \to \frac{\pi}{2}}{\text{Lt}} \left(\tan x - \frac{2 x \sec x}{\pi}\right)$

10. $\underset{x \to \frac{\pi}{2}}{\text{Lt}} \left(x \tan x - \frac{\pi}{2} \sec x\right)$

11. $\underset{x \to 0}{\text{Lt}} \left\{\frac{1}{x} - \frac{\log (1 + x)}{x^2}\right\}$

12. $\underset{x \to \frac{\pi}{2}}{\text{Lt}} \left(\sec x - \frac{1}{1 - \sin x}\right)$

75. தேரப்பெரு வகைகள் 0^0, 1^∞, ∞^0 ...

$$\underset{x \to a}{\mathrm{Lt}} \left\{ f(x) \right\}^{F(x)} \text{ காணும்முறை}$$

இங்கு $\underset{x \to a}{\mathrm{Lt}} f(x) = 0$, $\underset{x \to a}{\mathrm{Lt}} F(x) = 0$ எனின், 0^0 என்றும்

$\underset{x \to a}{\mathrm{Lt}} f(x) = 1$, $\underset{x \to a}{\mathrm{Lt}} F(x) = \infty$ 1^∞ என்றும்

வரும்.

வரும். $\underset{x \to a}{\mathrm{Lt}} f(x) = \infty$, $\underset{x \to a}{\mathrm{Lt}} F(x) = 0$,, ∞^0 என்றும்

$y = f(x)^{F(x)}$ எனக்கொள்வோம்.

இரு புறத்தும் மடக்கை எடுப்பின்,

$$\log y = F(x) \log f(x)$$

ஆகவே, $\log y = 0 \times \log 0 = 0 \times -\infty$

அல்லது, $\log y = \infty \times \log 1 = \infty \times 0$

அல்லது, $\log y = 0 \times \log \infty = 0 \times \infty$

$\log y$-ன் மதிப்பு $0 \times \infty$ என்ற தேரப்பெரு வகையினுல் காணலாம். இதனுல், y-ன் மதிப்பு காண்பது எளிது.

பயிற்சி 14.

$$\underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \left(\tan x \right)^{\tan 2x} \quad \text{காண்க.}$$

$$y = \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \left(\tan x \right)^{\tan 2x} \quad \text{எனக் கொள்வோம்.}$$

வகை 1^∞

$$\therefore \quad \log y_0 = \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \tan 2x \cdot \log (\tan x) \qquad \text{வகை } \infty \times 0$$

$$= \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \frac{\log (\tan x)}{\cot 2x} \qquad \text{வகை } \frac{0}{0}$$

$$= \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \frac{\frac{\sec^2 x}{\tan x}}{-2\,\mathrm{cosec}^2\, 2x}$$

$$= \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} \frac{-\sin^2 2x}{\tan x \cos^2 x}$$

$$= \underset{x \to \frac{\pi}{4}}{\mathrm{Lt}} -2 \sin x \cos x$$

$$= -1$$

$$\therefore\ y = e^{-1} = \frac{1}{e}.$$

பயிற்சி 15.

$$\underset{x \to 1}{\mathrm{Lt}} (1 - x^2)^{\frac{1}{\log (1 - x)}}$$ காண்க.

$$y = \underset{x \to 1}{\mathrm{Lt}} (1 - x^2)^{\frac{1}{\log (1 - x)}}$$ வகை 0^0

$$\log y = \underset{x \to 1}{\mathrm{Lt}} \frac{\log (1 - x^2)}{\log (1 - x)}$$ வகை $\frac{\infty}{\infty}$

$$= \underset{x \to 1}{\mathrm{Lt}} \frac{1 - x}{1 - x^2} \frac{(-2x)}{(-1)}$$

$$= \underset{x \to 1}{\mathrm{Lt}} \frac{2x}{1 + x}$$

$$= 1$$

$$y = e$$

பயிற்சி 16.

$$\underset{x \to \infty}{\mathrm{Lt}} (1 + x^2)^{e^{-x}}$$ காண்க.

$$y = \underset{x \to \infty}{\mathrm{Lt}} (1 + x^2)^{e^{-x}}$$ வகை ∞^0

$$\log y = \underset{x \to \infty}{\text{Lt}} \; e^{-x} \log(1+x^2) \text{ வகை } 0 \times \infty$$

$$= \underset{x \to \infty}{\text{Lt}} \frac{\log(1+x^2)}{ex} \text{ வகை } \frac{\infty}{\infty}$$

$$\underset{x \to \infty}{\text{Lt}} \frac{2x}{ex(1+x^2)} \text{ வகை } \frac{\infty}{\infty}$$

$$= \underset{x \to \infty}{\text{Lt}} \frac{2}{ex\,2x + ex(1+x^2)}$$

$$= 0$$

$$y = e^0 = 1$$

பயிற்சிகள் 25.

கீழ்க்கண்டவற்றின் மதிப்பைக் காண்க.

1. $\underset{x \to 0}{\text{Lt}} \; x^x$

2. $\underset{x \to 1}{\text{Lt}} \; (2-x)^{\tan \frac{\pi x}{2}}$

3. $\underset{x \to 0}{\text{Lt}} \; (\cos x)^{\frac{2}{\operatorname{cosec} x}}$

4. $\underset{x \to 0}{\text{Lt}} \; (\cos x)^{\frac{2}{\cot x}}$

5. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\log \frac{1}{x}\right)^{\log(1-x)}$

6. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{x}{e^x \; 1}\right)^{\frac{1}{x}}$

7. $\underset{x \to 0}{\text{Lt}} \; (\cos a x)^{\frac{1}{x^2}}$

8. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{1-x}{1-x}\right)^{\frac{1}{x}}$

9. $\underset{x \to 0}{\text{Lt}} \; (\cos a x)^{\frac{1}{x}}$

10. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{\tan x}{x}\right)^{\frac{1}{x^2}}$

11. $\underset{x \to \frac{\pi}{2}}{\text{Lt}} \; (\sin x)^{2 \tan x}$

12. $\underset{x \to 1}{\text{Lt}} \; x^1 - \frac{3}{x}$

13. $\underset{x \to 1}{\text{Lt}} \left(2 - \frac{x}{a}\right)^{\tan \frac{\pi x}{2a}}$

14. $\underset{x \to 0}{\text{Lt}} \left(\frac{a^x + b^x}{2}\right)^{\frac{1}{x}}$

15. $\underset{x \to 0}{\text{Lt}} \; \frac{(1+x)^{\frac{1}{x}} - e}{x}$


6. மீப்பெரு மதிப்பும் மீச்சிறு மதிப்பும்

(Maxima and Minima)

76. ஒரு சார்பும், அதன் வகைக்கெழுவும் தொடர்ச்சி உடையனவாக இருப்பின், சார்பின் மீப்பெரு மதிப்புகளும் மீச்சிறு மதிப்புகளும் காணும் முறையினை இப் பகுதியில் ஆராய்வோம். முதலாவதாக மீப்பெரு மதிப்பு என்றால் என்ன? மீச்சிறு மதிப்பு என்றால் என்ன? என அறிதல் வேண்டும் ஆதலின் ஒரு சார்பின் மீப்பெரு மதிப்பினையும், மீச்சிறு மதிப்பினையும் முதற்கண் வரையறுப்போம்.


தொடருடைச் சார்பு ஒரு மதிப்பு வரை கூடி வந்து பின்னர்க் குறையுமாயின் அம் மதிப்பு சார்பின் மீப்பெரு மதிப்பு என்று கூறப்படும். அதுபோல ஒரு சார்பு ஒரு மதிப்பு வரை குறைந்து வந்து பின்னர்க் கூடுமாயின் அம் மதிப்பு மீச்சிறு மதிப்பு எனப்படும். அஃதாவது, மீப்பெரு மதிப்பும், மீச்சிறு மதிப்பும் தத்தம் அண்மையிலுள்ள எல்லா மதிப்புகளையும்விட முறையே பெரியதாகவும், சிறியதாகவும் உள்ளன என்பது கருத்து. எடுத்துக்காட்டாக, $f(x)$ என்று சார்பை ஆராய்வோம். a-க்கு அண்மையிலுள்ள x-ன் மதிப்புகளுக்கு எதிர் நிலையான $f(x)$-ன் மதிப்புகளைக் காட்டிலும் $f(a)$ பெரியதாயின், அது $f(x)$-ன் மீப்பெரு மதிப்பாகும். ஆகவே, $f(x)$, $x=a$ என்ற இடத்தில் மீப்பெரு மதிப்பை அடைகின்றது. இதனைப் பின்வருமாறு விளக்கலாம். $(a-h, a+h)$ வீச்சிலுள்ள x-ன் மீப்பெரு மதிப்பு $f(a)$ ஆகும். இங்கு h-ன் மதிப்பு மிகச் சிறியது. இது போன்றே மீச்சிறு மதிப்பையும் வரையறுக்கலாம்.

பின்வரும் படத்தில் A புள்ளிகள் மீப்பெரு மதிப்புகளையும், B புள்ளிகள் மீச்சிறு மதிப்புகளையும் குறிப்பிடுகின்றன. இவ் வளைவரையில் பின்வரும் உண்மைகள் புலனுகும் :



படம்-11

ஒரு சார்புக்கு மீப்பெரு மதிப்புகளும், மீச்சிறு மதிப்புகளும் பல இருக்கலாம். மீப்பெரு மதிப்பு சார்பின் மிகக் கூடிய மதிப்பு என்ருே, மீச்சிறு மதிப்பு சார்பின் மிகக் குறைந்த மதிப்பு என்ருே சொல்லுவதற்கில்லை. சில மீச்சிறு மதிப்புகள், சில மீப்பெரு மதிப்புகளினும் கூடுதலாக இருக்கவும் செய்யலாம். மீப்பெரு மதிப்புகளும், மீச்சிறு மதிப்புகளும் தம்முள் ஒன்றன் பின் ஒன்ருக வருகின்றன. அஃதாவது மீப்பெரு மதிப்பு இரண்டிற்கிடையில் ஒரு மீச்சிறு மதிப்பும், மீச்சிறு மதிப்பு இரண்டினுக் கிடையில் ஒரு மீப்பெரு மதிப்பும் வரும் என்பது கருத்து



படம்-12

இவற்றை y sec x என்ற சார்பினல் விளக்குவோம். $-\frac{\pi}{2}$ -லிருந்து 0-க்கு x கூடுகையில் ∞-லிருந்து 1-க்கு sec x குறைகிறது; 0-லிருந்து $\frac{\pi}{2}$ -க்கு x கூடுகையில் 1-லிருந்து ∞-க்கு sec x கூடுகிறது. ஆகவே, sec x-ன் மீச்சிறு மதிப்பு 1 ஆகும். $\frac{\pi}{2}$ -லிருந்து π-க்கு x கூடுகையில்

-∞-லிருந்து —1-க்கு sec x கூடுகிறது; π-ல் இருந்து $\frac{3}{2}$ π-க்கு x கூடுகையில் — 1 லிருந்து — ∞-க்கு sec x குறைகிறது. ஆகவே sec x-ன் மீப்பெரு மதிப்பு — 1.

இங்கு மீப்பெரு மதிப்பைவிட மீச்சிறு மதிப்பு பெரிதாக இருப்பது கருதத் தக்கது.

77. தேற்றம் 1.

$f(x)$ மீப்பெரு மதிப்பையோ மீச்சிறு மதிப்பையோ அடையுங்கால் x-ன் மதிப்பு a ஆயின் $f'(a) = 0$.

$f(x)$-ன் மீப்பெரு மதிப்பாக $f(a)$ இருப்பின், $a-h$-லிருந்து a-க்கு x கூடும்பொழுது, $f(x)$-ன் மதிப்பும் கூடிக்கொண்டே வருகிறது. (அதாவது, $a - h$, a)வீச்சில் $f(x)$ ஒரு கூடுஞ் சார்பு ஆகவே, $(a - h, a)$-ல் $f'(x)$ மிகையாகும்.

ஆனல், a-லிருந்து $a+h$-க்கு x கூடும்பொழுது $f(x)$-ன் மதிப்பு குறைந்துகொண்டே வருகிறது. அதாவது $(a, a+h)$ வீச்சில் ஒரு குறையுஞ் சார்பு, ஆகவே, $(a, a+h)$-ல் $f'(x)$-ன் மதிப்பு குறையாகும்.

$(a - h)$-ல் இருந்து, $(h+a)$-க்கு a வழியாக x-ன் மதிப்பு கூடுங் கால் $f'(x)$-ன் மதிப்பு மிகையிலிருந்து குறையாக மாறுகிறது இவ்விதம் மாறின் $f(x)$-ன் மீப்பெரு மதிப்பு $f(a)$ ஆகும்.

இவ்விதமே a வழியாக x-ன் மதிப்பு கூடும்பொழுது $f'(x)$-ன் மதிப்பு குறையிலிருந்து மிகையாக மாறினல் $f(x)$-ன் மீச்சிறு மதிப்பு $f(x)$ ஆகும்.

ஒரு தொடருடைச் சார்பின் குறி மாறும் இடத்து அதன் மதிப்பு சுன்னமாகும். இங்கே $f'(x)$ ஒரு தொடருடைச் சார்பாதலின் $f'(a) = 0$.

78. தேற்றம் 2.

$f'(a)=0$ ஆகவும், $f''(a)=0$ ஆகவும் இருப்பின், மீப்பெரு மதிப்பையும், $f'(a)=0$ ஆகவும் $f''(a) > 0$ ஆகவும் இருப்பின் மீச்சிறு மதிப்பையும் a-ல் $f(x)$ அடைகின்றது.


$f(x)$-ன் மீப்பெரு மதிப்பு $f(a)$ ஆகின் a வழியாக x கூடுங் கால் மிகையிலிருந்து குறைக்கு $f'(x)$ மாறும் என்று முந்திய தேற்றத்திற் பார்த்தோம். ஆகவே, a-வுக்கு அருகில் $f'(x)$ ஒரு குறையுஞ்சார்பு. அதனுல் அதன் வகைக்கெழுவான $f''(x)$ a-க்கு அருகில் குறை மதிப்புடையது ஆதல் வேண்டும். ஆனுல், $f''(a) \neq 0$ ஆக இருப்பதால் $f''(x)$, $f''(a)$ என்பவை ஓரே குறியைப் பொறுத்திருக்கின்றன. ஆகவே, $f(x)$ a இடத்து மீப்பெரு மதிப்பைப் பெறுங்கால் $f''(a)$-ன் மதிப்பு குறையாகும்.

இவ்வாறே $f(x)$-ன் மீச்சிறு மதிப்பு $f(a)$ ஆகுங்கால் $f''(a)$-ன் மதிப்பு மிகையாகும் என்று எளிதிற் காணலாம்.

79. $f(x), f'(x)$ தொடருடைச் சார்புகளின் $f(x)$-ன் மீப்பெரு, மீச்சிறு மதிப்புகளைக் காணும் விதி.

$f'(x)=0$ என்ற சமன்பாட்டுத் தீர்வுகள் x-ன் மதிப்புகளாக இருப்பின் அவ்விடத்து $f(x)$ மீப்பெரு அல்லது மீச்சிறு மதிப்பினை அடைகிறது. aஐ $f'(x)=0$-ன் தீர்வுகளுள் ஒன்றெனக் கொள்வோம். $f''(x)$ கண்டு அங்கு x-க்குப் பதில் aஐ ஈடாக்குக. $f''(a)$ குறை மதிப்புடையதாயின் $f(x)$-ன் மீப்பெரு மதிப்பு $f(a)$; $f''(a)$ மிகை மதிப்புடையதாயின், $f(x)$-ன் மீச்சிறு மதிப்பு $f(a)$. $f''(a)=0$ ஆயின், a-ல் $f(x)$ மீப்பெரு மதிப்பையோ, மீச்சிறு மதிப்பையோ அடைவதில்லை.

80. வடிவக் கணிதத்தால் இத் தேற்றங்களுக்குத் தெரிப்பு



படம். 13

இப் படத்திலுள்ள வளைவரையில் A, C என்பவற்றின் குத்தாயங்கள் (ordinates) சார்பின் மீப்பெரு மதிப்புகளையும், B, D என்பவற்றின் குத்தாயங்கள் சார்பின் மீச்சிறு மதிப்புகளையும் குறிப்பிடுகின்றன.

(x, y) புள்ளியிடத்துத் தொடுவரை x ஆயத்தோடு கோணம் θ-வைப் பிறப்பித்தால் $\tan\theta = \frac{dy}{dx}$ என்று கண்டோம்.

A, B, C, D என்ற புள்ளிகளிடத்துத் தொடுவரைகள் x ஆயத்தோடு ஒருபோகுக் கோடுகளாக உள்ளன.

ஆகவே, $\theta = 0$

$\tan\theta = 0$

அஃதாவது $\frac{dy}{dx} = 0$

A, C என்பவற்றின் பின் θ ஒரு குறுங்கோணம்.

$\therefore\ \tan\theta = +$ அஃதாவது $\frac{dy}{dx} = +$

A, C என்பவற்றின் பின் θ ஒரு விரிகோணம்,

$\tan\theta = -1$ அஃதாவது $\frac{dy}{dx} = -$

ஆகவே, ஒரு மீப்பெரு மதிப்பைக் கடந்து செல்லும் போது $\frac{dy}{dx}$-ன் குறி மிகையிலிருந்து குறையாக மாறும். இவ்வண்ணமே, ஒரு மீச்சிறு மதிப்பைக் கடக்கையில் $\frac{dy}{dx}$-ன் குறி குறையிலிருந்து மிகையாக மாறும். இதனால், $\frac{d^2y}{dx^2}$ குறையாக இருப்பின், மீப்பெரு மதிப்பும் மிகையாக இருப்பின், மீச்சிறு மதிப்பும் வரும் என்று இம் முறையாலும் நிறுவலாம்.

81. மற்றும் ஒரு நெறிப்பு: இத் தேற்றங்களை இடைமதிப்புத் தேற்றத்தினாலும் நிறுவுதல் முடியும். பொதுப்படை இடைமதிப்புத் தேற்றப்படி

$$f(x+h) = f(a) + h f'(a) + \frac{h^2}{2!} f''(a) + \ldots + \frac{h^n}{n!} f^n(a+\theta h)$$

இங்கு $0 < \theta < 1$

$$f(a+h) - f(a) = h\left[f'(a) + \frac{h}{2!} f''(a) + \ldots\ldots\ldots\ldots + \frac{h^{n-1}}{n!} f^n(a+\theta h)\right]$$

இச் சமன்பாட்டில் இடப் பக்கத் தொடர்பு

$f'(a) + \frac{h}{2!} f''(a) + \ldots + \frac{h^{n-1}}{n!} f^n(a + \theta h)$-ம் $f'(a)$-ம் மிகச்சிறு மதிப்புடையதாயின் ஒரே குறியைப் பெறும்.

ஆகவே $f(a+h) - f(a)$-ன் குறியும், $hf'(a)$-ன் குறியும் ஒன்றே. h-ன் குறியைப் பொறுத்து $hf'(a)$ குறி அமைவதாகும். அஃதாவது h மிகையாகுங்கால் $h f'(a)$ பெறுங்குறியும், h குறையுங்கால் அது பெறுங்குறியும் தம்முள் வேறுபாடுடையன. மாற்றம் h-ன் குறி மாறுதலைப் பொறுத்தது என அறியலாம். $f(x)$-ன் மீப்பெரு மதிப்பு $f(a)$ ஆயின், h-ன் சிறு மதிப்புகளுக்கு $f(a) > f(a+h)$.

h-ன் குறி எதுவாயினும் $f(a+h) - f(a) = -$ இவ்விதமே மீச்சிறு மதிப்புக்கு $f(a+h) - f(a) = +$ ஆகவே, மீச்சிறு, மீப்பெரு மதிப்புகளுக்கு h-ன் குறிமாறினும் $f(a+h) - f(a)$-ன் குறி மாறுதலில்லை. $f(a+h) - f(a)$-ன் குறியும், $h\ f'(a)$-ன் குறியும் ஒன்றேயாதலால் $f'(a) = 0$.

$f'(a) = 0$ என்றிருப்பின்,

$$f(a+h) - f(a) = h^2\left[\frac{f''(a)}{2!} + \frac{h}{3!} f'''(a) + \ldots\ldots + \frac{h^{n-1}}{n!} f^n(a+\theta h)\right]$$

h^2 எப்பொழுதும் மிகையாதலின் இடப்பக்கத்துத் தொடரின் குறி $f''(a)$-ன் குறியைச் சார்ந்து நிற்கிறது. ஆகவே, $f''(a)$ குறைக் குறி ஆயின், $f(a+h) - f(a)$-ம் குறைக் குறியாகும். $f''(a)$ மிகைக் குறியாயின், $f(a+h) - f(a)$ மிகைக் குறி ஆகும்.

$\therefore\ f''(a) < 0$ என்றால், $x = a$-ல் $f(x)$ மீப்பெரு மதிப்பைக் கொள்கிறது.

$f''(a) > 0$ எனின், $x = a$-ல் $f(x)$ மீச்சிறு மதிப்பைக் கொள்கிறது.

இங்கே $f(x), f'(x) \ldots\ldots\ldots f^{n}(x)$ என்பவை தொடர்ச்சியுடைச் சார்புகளாக இருந்தால்தான், இத்தெரிப்பு பொருந்தும்.

பயிற்சி 1

$2x^3 - 3x - 36x + 10$ என்ற சார்பின் மீப்பெரு மதிப்பையும், மீச்சிறு மதிப்பையும் காண்க.

$f(x) - 2x^3 - 3x - 36x + 10$ என்று கொள்வோம். மீப்பெரு மதிப்பையோ, மீச்சிறு மதிப்பையோ $f(x)$ கொள்ளும் பொழுது $f'(x) = 0$.

$$f'(x) = 6x^2 - 6x - 36$$
$$= 6(x - 3)(x + 2)$$

$\therefore\ x = 3, x = -2$ என்ற இடத்து $f(x)$-ன் மீப்பெரு, மீச்சிறு மதிப்புகள் வருகின்றன.

$f(x)$ x-ன் எம்மதிப்புக்கு மீப்பெரு மதிப்பைக் கொள்ளும்? எம்மதிப்புக்கு மீச்சிறு பதிப்பைக் கொள்ளும்? எனப் பார்ப்போம்.

$$f''(x) = 12x - 6$$
$$= 6(2x - 1)$$

$x = 3$ ஆயின். $f''(x) = 12x \times 3 \quad 6 = 30 = +$

$x = -2$ ஆயின், $f''(x) = 12 \times -2 - 6 = -30 = -$.

ஆகவே, $x = 3$ மீச்சிறு மதிப்பையும், $x = -2$ மீப்பெரு மதிப்பையும் தருகின்றன.

மீச்சிறு மதிப்பு $= f(3) = -71$

மீப்பெரு மதிப்பு $= f(-2) = 54$.

பயிற்சி 2.

x-ன் மிகை மதிப்புகளுக்கு $\frac{\log x}{x}$ -ன் மீப்பெரு மதிப்பு என்ன?

$$(x) = \frac{\log x}{x}$$

$$f'(x) = \frac{1 - \log x}{x^2}$$

$$f''(x) = \frac{-3 + 2\log x}{x^3}$$

மீப்பெரு, மீச்சிறு மதிப்புகளுக்கு $f'(x) = 0$.

$\therefore \quad 1 - \log x = 0 \qquad\qquad \therefore \quad x = e$

$$f''(e) = \frac{-3 + 2\log e}{e^3} = -\frac{1}{e^3}.$$

$\therefore \quad x = e$ மீப்பெரு மதிப்பைத் தருகின்றது.

மீப்பெரு மதிப்பு $f(e) = \dfrac{1}{e}$.

பயிற்சி 3.

$a^2 \sec^2 x + b^2 \operatorname{cosec}^2 x$-ன் மீச்சிறு மதிப்பு $(a+b)^2$ என்று நிறுவுக.

$$f(x) = a^2 \sec^2 x + b^2 \operatorname{cosec}^2 x$$

$$f'(x) = 2a \sec^2 x \tan x - 2b \operatorname{cosec}^2 x \cot x$$

$$= 2. \frac{a^2 \sin^4 x - b^2 \cos^4 x}{\cos^3 x \cdot \sin^3 x}$$

$$f''(x) = 2. \frac{4 \sin^4 x \cos^4 x (a^2 \sin^2 x + b^2 \cos^2 x) - (a^2 \sin^4 x - b^2 \cos^4 x) \times \frac{d}{dx} (\cos^3 x \cdot \sin^3 x)}{\cos^6 x \cdot \sin^6 x}$$

மீப்பெரு, மீச்சிறு மதிப்புகளுக்கு $f'(x) = 0$

$$a^2 \sin^4 x - b^2 \cos^4 x = 0$$

அப்பொழுது, $f''(x) = \cdot 8 \, (a^2 \sec^2 x + b^2 \operatorname{cosec}^2 x) = +$

$\therefore \quad a^2 \sin^4 x - b^2 \cos^4 x = 0$ மீச்சிறு மதிப்பைத் தருகின்றது.

$$\therefore \tan^2 x = \frac{b^2}{a}.$$

$f(x)$-ன் மீச்சிறு மதிப்பு $\tan^2 x = \frac{b}{a}$ என்றிருப்பின்

வரும்.

$$\therefore \quad f(x) = a^2 \sec^2 x + b^2 \operatorname{cosec}^2 x$$

$$= a^2 (1 + \tan^2 x) + b^2 (1 + \cot^2 x)$$

$$= a^2 \left(1 + \frac{b}{a}\right) + b^2 \left(1 + \frac{a}{b}\right)$$

$$= (a + b)^2.$$

பயிற்சி 4.

x, y மிகை மதிப்பு உடையன. $x^2 + xy + y^2 + 3k^2$ என்றிருப்பின், $ax + by$-ன் மீப்பெரு மதிப்பு $2k\sqrt{a^2 - ab + b^2}$ என்று நிறுவுக.

$ax + by$ மீப்பெரு மதிப்பைக் கொண்டால் அதன் வகைக் கெழு சுன்னமாகும்.

$$\therefore a + b\frac{dy}{dx} = 0 \ldots\ldots (1)$$

$$x^2 + xy + y^2 = 3k^2$$

இச் சமன்பாட்டின் வகைக்கெழு காணின்,

$$(2x + y) + (x + 2y)\frac{dy}{dx} = 0 \ldots\ldots (2)$$

சமன்பாடுகள் (1), (2)-ல் உள்ள $\frac{dy}{dx}$-ன் மதிப்புகளைச் சமனுக்கின்,

$$= \frac{a}{b} = -\frac{2x + y}{x + 2y}$$

$$\therefore y = \frac{a - 2b}{b - 2a} x \ldots\ldots (3)$$

சமன்பாடு (2)-ன் வகைக்கெழுவை மறுபடியும் காணின்,

$$2 + 2\frac{dy}{dx} + 2\left(\frac{dy}{dx}\right)^2 + (x + 2y)\frac{d^2y}{dx^2} = 0 \ldots\ldots (4)$$

சமன்பாடுகள் (1), (3)-ல் இருந்து $\frac{dy}{dx}$, y என்பவற்றின் மதிப்பை (4)-ல் ஈடாக்கின்.

$$\frac{d^2y}{dx^2} = \frac{2}{3}\,\frac{a^2-ab+b^2}{b^2}\,\frac{b-2a}{x}$$

மீப்பெரு மதிப்புக்கு $\frac{d}{dx}\left(a+b\frac{dy}{dx}\right) = -$

அதாவது, $b\,\frac{d^2y}{dx^2} = -$

(அ-து.) $\frac{d^2y}{dx^2} = -$

$\frac{a^2-ab+b^2}{b^2} = +$ ஆகையால், $\frac{b-2a}{x} = -$

$$x^2+xy+y^2=3k^2$$

3)-ல் இருந்து y-ன் மதிப்பை ஈடாக்கின்,

$$x\sqrt{a^2-ab+b^2} = \pm k\,(b-2a)$$

$\frac{b-2a}{x}$ குறைக்குறி உடையதாயின்,

$$x\sqrt{a^2-ab+b^2} = -k\,(b-2a)$$

$$ax+by = ax+\frac{b\,(a-2b)}{b-2a}\cdot x$$

$$= -2\,(a^2-ab+b^2)\cdot\frac{x}{b-2a}$$

$$= 2\,(a^2-ab+b^2)\,\frac{k}{\sqrt{a^2-ab+b^2}}$$

$$= 2k\sqrt{a^2-ab+b^2}$$

பயிற்சிகள் 26.

1. பின்வரும் சார்புகளுக்கு மீப்பெரு, மீச்சிறு மதிப்புகள் உளவாயின், அவற்றைக் காண்க :

(1) $x^3 - 3x$

(2) $4x^3 - 18x^2 + 27x - 7$

(3) $3x^4 - 4x^3 + 1$

(4) $x^5 - 15x^3 + 3$

(5) $4x^3 - 21x^2 + 18x + 20$

(6) $(x - 1)^n (x + 2)$

(7) $a \cos x + b \sin x$

(8) $a^2 \cos^2 x = b^2 \sin^2 x$

2. $\dfrac{1 + x + x^2}{1 - x + x^2}$ -ன் மீப்பெரு மதிப்பு 3 என்றும், மீச்சிறு மதிப்பு $\frac{1}{3}$ என்றும் நிறுவுக.

3. $x\sqrt{ax - x^2}$ சார்பு $x = \frac{3}{4}a$ என்று இருக்குங்கால் மீப்பெரு மதிப்பைக் கொள்ளும் என்று நிறுவுக.

4. $\dfrac{(x - 1)^2}{(x - 3)^3}$ சார்பின் மீப்பெரு மதிப்பு $\dfrac{2}{27}$ என்றும், மீச்சிறு மதிப்பு சுன்னமென்றும் நிறுவுக.

5. $x = \dfrac{\pi}{5}$ ஆயின், $\sin x\,(1 + \cos x)$-ல் மீப்பெரு மதிப்பைக் கொள்கிறது என்று நிறுவுக.

6. $xy(y - x) = 2a^2$ எனின், $x = a$-ல் y மீச்சிறு மதிப்பைக் கொள்கிறது என்று நிறுவுக.

7. $\left(\dfrac{1}{x}\right)^x$-ன் மீப்பெரு மதிப்பு $e^{1/e}$ என்று நிறுவுக.

8. $x e^{-x}$ - ன் மீப்பெரு மதிப்பினைக் காண்க.

9. $x \log x$-ன் மீச்சிறு மதிப்பினைக் காண்க.

10. $x^2 \log \dfrac{1}{x}$ -ன் மீச்சிறு மதிப்பு என்ன ?

11. x, y என்பவை மிகை ஆகவும், $x + y = k$ ஆகவும் இருப்பின், $x^m y^n$-ன் மிகப் பெரிய மதிப்பு $\frac{m^m n_n \quad k^{m+n}}{(m+n)^{m+n}}$ என்று நிறுவுக.

12. θ, ϕ என்றிவை குறுங்கோணங்களாகவும், அவற்றின் தொடர்பு $a \sec \theta + b \sec \phi = c$ ஆகவும் இருப்பின், $\theta = \phi$ என்ற நிலையில் $a \cos \theta + b \cos \phi$ மீச்சிறு மதிப்பைக் கொள்ளும் என்று நிறுவுக. இங்கு a, b, c என்பவை மிகையாகும்.

13. x-ன் மதிப்பு $a_1, a_2, a_3,$ . . . . a_n-ன் கூட்டிடை (Arithmetic Mean) ஆயின், $(x-a)^2 \; (x-a)^2 + — + (x-an)^2$ மீச்சிறு மதிப்பைக் கொள்ளும் என்று நிறுவுக.


14. $f(x) \quad (x-a)^2 \phi(x)$ என்றிருப்பின், $\phi(a)$-ன் குறியைச் சார்ந்து $f(x)$-ன் மீப்பெரு, மீச்சிறு மதிப்புகள் உள என்று நிறுவுக.

15. $x^3 (x-2)^2$ சார்பின் மீப்பெரு, மீச்சிறு மதிப்புகள் யாவை?

பயிற்சி 5.

எங்கும் ஒன்றுபோல் கனமேற்றிய l அடி நீண்ட உத்தரத்தின் வளைவு நெம்புத்திறன் (Bending Moment) $M = \frac{1}{2} w \, l \, x - \frac{1}{2} wx^2$ (இங்கு $w =$ ஓர் உத்திரத்தின் மேலுள்ள கனம்) எனவே, உத்தரத்து மையத்தில் வளைவு நெம்புத்திறன் கூடுதலாகும் என்று நிறுவுக.

$$M = \tfrac{1}{2} \, wlx \; - \; \tfrac{1}{2} wx^2.$$



M-ன் மீப்பெரு மதிப்பு $\frac{dM}{dx} = 0, \; \frac{d^2 M}{dx^2} = -$ என்றிருப்பின் கிடைக்கும்.

$$\frac{dM}{dx} = \tfrac{1}{2} \, wl - wx$$

$$\frac{d^2 M}{dx^2} = - w.$$

$$\frac{dM}{dx}=0 \therefore \tfrac{1}{2}wl-wx=0 \therefore x=\tfrac{1}{2}l$$

$$\frac{d^2M}{dx^2}=-w.$$ இஃது எப்பொழுதும் குறையாகும்.

$\therefore$ வளைவு நெம்புத்திறன் $x=\frac{1}{2}l$ ஆயின் (அஃதாவது உத்தர மையத்தில்) கூடுதலாகும்.

பயிற்சி 6.

இரு எண்களின் கூட்டுத் தொகை 40. அவற்றின் இரு படிகளின் கூட்டுத்தொகை மிகக் குறைவாயின் அவ்வெண்கள் யாவை?

அவ்வெண்கள் x, y என்று கொள்வோம்.

ஆகவே, $x+y=40$.

அவற்றின் இரு படிகளின் கூட்டுத்தொகை

$$=x^2+y^2.$$

இதனை S என்று கொள்வோம்.

$$S=x^2+y^2$$

$$S=x^2+(40-x)^2$$

S-ன் மதிப்பு மிகச் சிறிதாக இருக்கையில் x-ன் மதிப்புக் காணல் வேண்டும்.

$$\frac{dS}{dx}=2x-2(40-x)$$

$$=4x-80$$

$$\frac{d^2S}{dx}=4,$$ இஃது எப்பொழுதும் மிகையாகும்.

$4x-80=0$ ஆயின், $\frac{dS}{dx}=0$

$$\therefore x=20$$

ஆகவே, எண்கள் 20 20

பயிற்சிகள் 27.

1. λ நீண்ட அலைகளின் வேகம் $\sqrt{\frac{\lambda}{a}+\frac{a}{\lambda}}$-க்குத் தகவு பொருத்தமுடையதாகும். இங்கு a ஒரு நிலை யெண். $\lambda = a$ என்றிருக்குங்கால், அலைகளின் வேகம் மிகவும் குறைவு என நிறுவுக.

2. ஒரு வோல்டா மின்கலம் (Voltaic cell) வெளியிடும் திறன் $\frac{E^2r}{(r+R)^2}$. இங்கு R உட்பிணர்வு (internal resistance) r வெளிப்பிணர்வு (external resistance), E = நிலையான மின்னுந்து (Electro motive force), $r=R$ ஆயின், P-ன் மதிப்புக் கூடுதலாகும் என்று நிறுவுக.

3. $\frac{n}{x}$ வரிசையும், வரிசைக்கு x கலங்களும் அடங்கிய ஒரு பேட்டரியின் (battery) உட்பிணர்வு r, வெளிப்பிணர்வு R, ஒரு கலத்தின் மின்னோகம் E, இப் பேட்டரி வழியாக வெளிப்படும் மின்னோட்டத்தின் அளவு $I = \frac{nxE}{x^2r+nR}$. மின்னோட்டம் கூடுதலாகக் கிடைப்பதற்கு ஒரு வரிசையில் எத்தனை கலங்களை அடக்குதல் வேண்டும்?

4. வேதி எதிர்வினையொன்றின் (Chemical reaction) வேகம் $v=k(b+x)(a-x)$. இங்கு k, a, b, நிலை யெண்களாகுமெனின், இவ்வேகம் எப்பொழுது மிகக் குறைவாகும்?

5. கடல் தந்திக்கம்பி கடத்தாப் பொருளினுள் (non conductor) உட்பட்ட செம்புக் கம்பியால் செய்யப்படுவது. செம்புக்கம்பியின் ஆரைக்கும், கடத்தாப் பொருளின் கனத்துக்கும் இடைப்பட்ட தகவு x எனின், செய்திகள் செல்லும் வேகம் $x \log \frac{1}{x}$-க்குத் தகுந்தாற்போல் வேறுபடும். $x = \frac{1}{\sqrt{e}}$ என்றிருப்பின் செய்திகள் மிக்க துரிதத்தில் செல்லும் என்று நிறுவுக.

6. கம்பி வழியாகச் செல்லும் மின்னோட்டத்தின் மொத்த அழிவு, மைல் ஒன்றுக்கு $W = C^2r + \frac{A}{r}$. இங்கு C மின்னோட்டத்

தின் அளவு (amperes), r ஒரு மைல் கம்பியிலுள்ள பிணர்வு, A ஒரு நிலை எண் எனின், r-ன் எம் மதிப்புக்கு மின்னோட்டத்தின் அழிவு மிகக் குறைவாகும்?

7. 100 அடி விட்ட முடைய வட்டமான நிலத்தின் நடுவே ஒரு தூணின் மேல் மின்சார விளக்கு ஒன்றுண்டு. தரைமட்டத்தில் விழும் விளக்கொளி அவ்விடத்திலிருந்து விளக்கின் தொலைக்கு இருபடியின் மாறுன தகவாகவும் (inverse ratio), அவ்விடம் வழியாகச் செல்லும் ஒளிக்கதிர் தரை மட்டத்தோடு பிறப்பிக்கும் கோணத்தின் நெடுக்கைக்குத் (sine) தகுந்தாற்போல் வேறுபட்டதாகவும் இருப்பின், அந்த நிலத்தைச் சுற்றியுள்ள வழியில் நல்ல வெளிச்சம் தெரிவதற்கு எவ்வளவு உயரத்தில் அவ்விளக்கு இருத்தல் வேண்டும்?

8. நீண்டதொரு சதுரத்தின் பரப்பளவு 25 ச. அடி எனின், அதன் (1) சுற்றளவு (2) மூலைவரை (diagonal) மிகக் குறைவாக இருப்பதற்கு உரிய நிலை என்ன?

9. பரப்பளவு கொடுக்கப்பட்ட ஒரு செங்கோண முக்கோணத்தின் சுற்றளவு எந்நிலையில் மிகக்குறைவாக இருக்கும்?

10. a ஆரையுடைய வட்டத்தில் வரையப்பட்ட ஒரு நீண்ட சதுரத்தின் சுற்றளவு எந் நிலையில் மிகக் கூடுதலாகும்? எந் நிலையில் மிகக் குறைதலாகும்?

11. (a, b) வழியாகச் செல்லும் கோடு ஆயங்களை (axes) P, Q-ல் வெட்டுமெனின், $OP+OQ$-ன் மீச்சிறு மதிப்பு $a+2\sqrt{ab}+b$ என்று நிறுவுக.

12. சுற்றளவு கொடுக்கப்பட்ட ஓர் ஆரைப் பகுப்புத் துண்டின் (sector) கோணம் 2 ஆரையனுயின் அத் துண்டின் பரப்பு மீப்பெரு மதிப்பைக் கொள்ளும் என்றும், அம் மதிப்பு ஆரையினது இருபடி ஆகும் என்றும் நிறுவுக.

பயிற்சி 7.

(1) மூடியின்றியோ (2) மூடியுடனே கொடுக்கப்பட்ட ஓர் உலோகத் தகட்டினல் மிகுந்த கொள்ளளவு அடங்கிய ஒரு வட்ட வுருட்டு (cylinder) செய்வதற்கு அவ்வுருட்டுகளின் வகையளவுகள் (dimensions) யாவை?

தகட்டின் பரப்பு S என்று கொள்வோம்.

(1) மூடி இல்லையெனின்,

$$S = \text{கலத்தின் புறப் பரப்பு}$$

$$= 2\pi xy + \pi x^2$$

இங்கு x = உருட்டின் அடிப்பாகத்து ஆரை

y = ,, உயரம்

உருட்டின் கொள்ளளவு $= \pi x^2 y$

$$\therefore \quad V = \pi x^2 \left\{ \frac{S - \pi x^2}{2\pi x} \right\}$$

$$= \tfrac{1}{2}(Sx - \pi x^3)$$

$$\frac{dV}{dx} = \tfrac{1}{2}(S - 3\pi x^2)$$

$$\frac{d^2V}{dx^2} = -3\pi x.$$

V மீப்பெரு மதிப்பை அடையும்பொழுது,

$$\frac{dV}{dx} = 0 \qquad \frac{d^2V}{dx^2} = -$$

$$\therefore \quad S - 3\pi x^2 = 0 \qquad \therefore \quad x = \sqrt{\frac{S}{3\pi}}$$

$$\text{உருட்டின் உயரம் } y = \frac{S - \pi x^2}{2\pi x}$$

$$= \sqrt{\frac{S}{3\pi}}$$

$$\text{உருட்டின் கொள்ளளவு} = \pi x^2 y$$

$$= \frac{S}{3}\sqrt{\frac{S}{3\pi}}$$

(2) மூடி உண்டெனின்,

S = உருட்டின் பரப்பு $= 2\pi xy + 2\pi x^2$

இங்கு x = உருட்டின் அடிப்பாகத்து ஆரை

y = உருட்டின் உயரம்

உருட்டின் கொள்ளளவு $V = \pi x^2 y$

$$V = \pi x^2 \left(\frac{S - 2\pi x^2}{2\pi x}\right)$$

$$= \tfrac{1}{2}(Sx - 2\pi x^3)$$

$$\frac{dV}{dx} = \tfrac{1}{2}(S - 6\pi x^2)$$

V மீப்பெரு மதிப்பை அடையும்பொழுது,

$$\frac{dV}{dx} = 0, \quad \frac{d^2V}{dx^2} = -$$

$\therefore \quad \tfrac{1}{2}(S - 6\pi x) = 0$. ஆகவே $x = \sqrt{\dfrac{S}{6\pi}}$

உருட்டின் உயரம் $y = \dfrac{S - 2\pi x^2}{2\pi x}$

$$= \frac{2S}{6\pi}\sqrt{\frac{6\pi}{S}}$$

$$= 2\sqrt{\frac{S}{6\pi}}$$

உருட்டின் கொள்ளளவு $= \pi x^2 y$


$$= \pi \frac{S}{6\pi} \cdot 2\sqrt{\frac{S}{6\pi}}$$

$$= \frac{S}{3}\sqrt{\frac{S}{6\pi}}$$

பயிற்சி 8.

ஒரு வட்டத் தகட்டில் அண்ணளவாக 66° அடங்கிய ஆரைப் பகுப்புத்துண்டு வெட்டினால், எஞ்சிய தகட்டைக் கொண்டு வளைத்துச் செய்யப்பட்ட கூம்பு வடிவமான கலத்தின் கொள்ளளவு கூடுதலாகும் என நிறுவுக.

ABC என்ற ஆரைப் பகுப்புத் துண்டின் கோணம் θ என்று கொண்டால், வெட்டவேண்டிய பகுதியின் கோணம்:



படம்-15

$$2\pi - \theta$$

இவ் வட்டத்தின் ஆரை R ஆகின்

$$\text{வில் } ABC = R\theta,$$

ஆகவே, கூம்பு வடிவமான கலத்தின் அடிப்பக்கத்துச் சுற்றளவு $= R\theta$.

$$\text{ஆகவே, கலத்தின் அடிப்பாக ஆரை} = \frac{R\theta}{2\pi}$$

$$\text{கலத்தின் சாய்வு உயரம்} = R$$

$$\text{ஆகவே, உயரம்} = \left(R^2 - \frac{R^2\ \theta^2}{4\ \pi^2}\right)^{\frac{1}{2}}$$

$$\text{கலத்தின் கொள்ளவு } V = \frac{\pi}{3}\ \frac{R^2\ \theta^2}{4\ \pi^2}\left(R^2 - \frac{R^2\ \theta^2}{4\ \pi^2}\right)^{\frac{1}{2}}$$

$$\therefore\ V = \frac{R^3}{12\pi}\left(\theta^4 - \frac{\theta^6}{4\ \pi^2}\right)^{\frac{1}{2}}$$

மீப்பெரு மதிப்பை V அடையும் பொழுது $\left(\theta^4 - \frac{\theta^6}{4\ \pi^2}\right)^{\frac{1}{2}}$ மீப்பெரு மதிப்பை அடைகிறது. அப்பொழுது,

$\theta^4 - \frac{\theta^6}{4\pi^2}$ மீப்பெரு மதிப்பைக் கொள்ளும்

$$f(\theta) = \theta^4 - \frac{\theta^6}{4\pi^2}$$

$$f(\theta) = 4\theta^3 - \frac{6\theta^5}{4\pi^2}$$

$$f''(\theta) = 12\,\theta^2 - \frac{30\,\theta^4}{4\pi^2}$$

$$= \theta^2\left(12 - \frac{15\,\theta^2}{4\pi^2}\right)$$

$f(\theta)$ மீப்பெரு மதிப்பைக் கொள்ளுகையில் $f(\theta) = 0$

$$\therefore\quad 4\,\theta^3 - \frac{6\,\theta^5}{2\pi^2} = 0, \quad \theta^2 = \frac{8}{3}\pi^2$$

அப்பொழுது, $f''(\theta) = \frac{8}{3}\pi^2\left(12 - \frac{15}{2}\times\frac{8}{3}\right) = -$

ஆகவே, கொள்ளளவு மிகக் கூடுதலாயின்

$$\theta = \sqrt{\frac{8}{3}\pi^2} = 2\pi\sqrt{\frac{2}{3}}$$

$\therefore$ ஆரைப் பகுப்புத் துண்டின் கோணம் $= 2\pi - \theta$


$$= 2\pi\left(1 - \sqrt{\frac{2}{3}}\right)$$

$= 1{\cdot}153$ ஆரையன்

$= 66^\circ{\cdot}\,6.$

பயிற்சி 9.

கனமுள்ள மரவுருண்டையைச் செதுக்கிச் செய்த கூம்பு வடிவமான ஒரு கலத்தின் முனை உருண்டையின் புறப்பரப்பிலும், உருண்டையின் மையம் கலத்தின் அச்சிலும் இருப்பின் கலத்தின் கனஅளவு எப்பொழுது கூடுதலாகும்?



உருண்டையின் ஆரை R ஆகவும், அதன் மையத்தின் தொலை அடிப் பாகத்திலிருந்து x ஆகவும் கொள்வோம்.

கூம்பின் உயரம் $= R + x$

கூம்பின் அடிப்பாகத்து ஆரை $= \sqrt{R^2 + x}$

படம் 16

$\therefore$ கூம்பின் கன அளவு $V = \frac{\pi}{3}(R + x)(R^2 + x^2)$

மீப்பெரு மதிப்பை v அடையுங்கால்,

$$\frac{dV}{dx} = 0, \quad \frac{d^2V}{dx^2} = -$$

$$\frac{dV}{dx} = \frac{\pi}{3}(R^2 - 2Rx - 3x^2)$$

$$= \frac{\pi}{3}(R-3x)(R+x)$$

$$\therefore x = \frac{R}{3} \text{ அல்லது } x = -R$$

x-க்கு $-R$ மதிப்பு வருவதில்லை.

கூம்பின் உயரம் $= R + x = \frac{4R}{3}$


அடிப்பாகத்தின் ஆரை $= \sqrt{R^2 - x^2} = \frac{2\sqrt{2}}{3}R$

கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi\left(\frac{2\sqrt{2}}{3}R\right)^2\frac{4R}{3}$

$$= \frac{32\pi R^3}{81}$$

பயிற்சி 10.

a, b வகை அளவுடைய (dimensions) நீண்ட சதுரத் தகட்டின் மூலைகளிலிருந்து ஒரே அளவுடைய சதுரத் துண்டுகளை வெட்டியெறிந்தபின் ஓரங்களை மடக்கிச் செய்யப் பட்ட ஒரு நீண்ட சதுரப் பெட்டியின் உயரம் $\frac{1}{6}\left\{a + b - \sqrt{a} - ab + b^2\right\}$ ஆக இருக்கையில் அதன் கொள்ளளவு மீப்பெரு மதிப்பாகும் என்று நிறுவுக.



படம்-17

மூலைகளிலிருந்து அகற்றிய சதுரத் துண்டின் நீளம் x என்று கொள்வோம்.

பெட்டியின் கொள்ளளவு

$$= (a - 2x)(b - 2x)x$$

$$= 4x^3 - 2x^2(a+b) + abx$$

மீப்பெரு, மீச்சிறு மதிப்புகளுக்கு $\frac{dV}{dx} = 0.$

$\therefore 12x^2 - 4x(a+b) + ab = 0$

$$x = \frac{2(a+b) + \sqrt{4(a+b) - 12ab}}{12}$$

$$= \frac{1}{6}\left\{(a+b) \pm (a^2 - ab + b^2)^{\frac{1}{2}}\right\}$$

$a^2 - ab + b^2 = (a-b)^2 + ab =$ மிகை மதிப்பு

$$\frac{d^2V}{dx^2} = 24x - 4(a+b)$$

$x = \frac{1}{6}\left\{(a+h) + (a^2 - ab + b^2)^{\frac{1}{2}}\right\}$ என்றிருப்பின்

$$\frac{d^2V}{d^2x} = 4(a^2 - ab + b^2)^{\frac{1}{2}} = \text{மிகை மதிப்பு}$$

$x = \frac{1}{6}\left\{(a+b) - (a^2 - ab + b^2)^{\frac{1}{2}}\right\}$ என்றிருக்கையில்

$$\frac{d^2V}{dx^2} = -4(a^2 - ab + b^2)^{\frac{1}{2}} - \text{குறை மதிப்பு}$$

ஆகவே, $x = \frac{1}{6}\left\{(a+b) - (a^2 - ab + b^2)^{\frac{1}{2}}\right\}$ என்றிருக்கையில் மீப்பெரு மதிப்பை V அடைகிறது.

பயிற்சிகள் 28.

1. ஒரு செங்கோண முக்கோணத்தில் செங்கோண எதிர் சிறைப்பக்கம் (hypotenuse) மற்றொரு பக்கம் ஆகிய இரண்டின் கூட்டுத்தொகை மீப்பெரு மதிப்பைக் கொள்ளின் இப் பக்கங்களின் இடைப்பட்ட கோணம் 60° என்று நிறுவுக.

2. மொத்தப் புறப்பரப்பு சுட்டப்பட்ட ஒரு கூம்பின் கன அளவு மீப்பெரு மதிப்பை அடையின் அதன் உச்சக் கோணத்தின் பாதி $\sin^{-1}\frac{1}{3}$ என்று நிறுவுக.

3. கன அளவு சொல்லப்பட்ட ஒரு கூம்பின் மொத்தப் புறப் பரப்பு மிகக் குறைவாயின் அதன் உச்சிக் கோணத்தின் பாதி $\sin^{-1}\frac{1}{3}$ என்று நிறுவுக.

4. இரு பக்கங்களும் மூடிய ஒரு வட்டவுருட்டு 400 ச. அடி கொண்ட தகட்டைக்கொண்டு செய்யுங்காலே, கழிவு 18·49 ச. அடி ஏற்பட்டது. அவ்வுருட்டின் கன அளவு மிகக் கூடுத லாயின், அதன் உயரம் என்ன?

5. கன அளவு சொல்லப்பட்ட ஓர் உலோகத்தை உருக்கி வார்த்த பாதி வட்ட உருட்டின் மொத்தப் புறப்பரப்பின் அளவு மிகக் குறைவாயின் அதன் உயரத்திற்கும் அருகிலுள்ள வட்டத் தின் விட்டத்திற்கும் இடைப்பட்ட தகவு $\frac{\pi}{\pi+2}$ என்று நிறுவுக.

6. சாய்வுயரம் சொல்லப்பட்ட ஒரு கூம்பின் கன அளவு மிகப் பெரிதாயின், அதன் உச்சிக்கோணம் $2\tan^{-1}\sqrt{2}$ என்று நிறுவுக.

7. a நீளமுடைய ஒரு கம்பியை இரு துண்டாக்கி ஒன்றினை வட்டவடிவமாகவும், பிறிதொன்றைச் சதுர வடிவமாகவும் ஆக்கிய பின், அவ்விரு துண்டுகளின் பரப்பின் கூட்டுத்தொகை மிகச் சிறியதாயின், அதன் மதிப்பு $\frac{a^2}{4(\pi+4)}$ என்று நிறுவுக.

8. V கன அளவும் S புறப்பரப்பும் உடைய நீண்ட சதுரப் பெட்டியின் ஒருபக்கம் மற்றொரு பக்கத்தைவிட n மடங்கு பெரியது; புறப்பரப்பு மிகச் சிறியதாயின் $nS^3 = 54(n+1)^2 V^2$ என்று நிறுவுக.

9. குறிப்பிட்ட அளவு தண்ணீர்கொள்ளும் ஒரு அண்டா வின் செங்குத்தான பக்கங்களையும், சதுர அடிப்பாகத்தையும் குறைவான செலவில் ஈயம் பூசுவதற்கு அதன் உயரம் அகலத்தின் பாதியாக இருத்தல் வேண்டும் என நிறுவுக.

அந்த அண்டா வட்டவுருட்டு வடிவாய் இருப்பின் அதன் உயரம் அடிப்பாகத்தின் ஆரை என்றும் நிறுவுக.

10 கோளம், கனசதுரம் என்ற இரண்டின் புறப்பரப்புக களின் கூட்டுத்தொகை கொடுக்கப்பட்டது எனக்கொண்டு அவற்றின் கன அளவுகளின் கூட்டுத்தொகை மிகச்சிறிதாயின், கோளத்தின் விட்டம் கன சதுரத்தின் பக்கத்திற்குச் சமம் என்று நிறுவுக.

11. R ஆரையுடைய ஒரு கோளத்துள் வரைந்த வட்டவுருட்டின் கனஅளவு மிகக் கூடுதலாயின் அதன் உயரம் $\sqrt{\frac{2R}{3}}$ என்று நிறுவுக.

அதன் வளைபரப்பு (Curved Surface) மிகக் கூடுதலாயின், உயரம் $\sqrt{\frac{R}{2}}$ என்று நிறுவுக.

மேலும், அதன் மொத்தப் புறப்பரப்பு மிகக் கூடுதலாயின் இப் பரப்புக்குக் கோணத்தின் பரப்புக்கும் இடைப்பட்ட தகவு $\frac{\sqrt{5}+1}{4}$ என்று நிறுவுக.

12. கூம்பினுள் வரைந்த ஒரு வட்டவுருட்டின் கன அளவு மிகக் கூடுதலாயின் அதன் உயரம் கூம்பினது உயரத்தின் மூன்றில் ஒன்று என்று நிறுவுக.

வட்டவுருட்டின் வளை பரப்பு மிகக் கூடுதலாயின் அதன் உயரம் கூம்பினது உயரத்தின் பாதி என்று நிறுவுக.

13. R ஆரையுடைய கோளம் உள்ளே வரையப் பெற்ற ஒரு வட்டக் கூம்பின் கனஅளவு மிகக் கூடுதலாயின், அதன் உயரம் $4R$ என்றும், உச்சிக்கோணம் $2 \sin^{-1} \frac{1}{3}$ என்றும் நிறுவுக.

14. வட்டவுருட்டு வடிவான ஒரு மரக் குற்றியைச் செதுக்கிச் செய்த ஓர் உத்திரத்தின் வன்மை அகலத்திற்கும் உயரத்தின் முப்படிக்கும் தருந்தாற்போல் வேறுபடுவதுண்டு; a விட்டமுடைய குறியைச் செதுக்கிச்செய்த உத்தரத்தின் வன்மை மிகக் கூடுதலாயின், அதன் அகலம் குற்றியின் ஆரை என்று நிறுவுக,

15. R ஆரையுடைய ஒரு கோளத்தினுள் வரையப்பட்ட ஒரு வட்டவுருட்டின் மொத்தப் புறப்பரப்பு மிகச் சிறிதாயின் $\frac{h^2}{R^2} = 2\left(1 - \frac{1}{\sqrt{5}}\right)$ என்று நிறுவுக. இங்கு உயரம் h.

16. h உயரமும் a உச்சிக்கோணப் பகுதியும் உடைய கூம்பினுள் வரையப்பட்ட ஒரு வட்டவுருட்டினது கன அளவின் மீப்பெருமதிப்பு $\frac{4}{27} \pi h^3 \tan \alpha$ என்று நிறுவுக.


17. $\frac{x^2}{a^2}+\frac{y^2}{b}=1$-ன் இரட்டைக் குத்தாயம் (double ordinate). PQ இந் நீள் வட்டத்தின் (ellipse) நெட்டச்சுத் (major axis) கோடி A எனின், APQ முக்கோணத்தின் மீப்பெரு மதிப்பு என்ன ?

18. A, B இரண்டும் நிலைப்புள்ளிகளாகவும் l என்ற கோட்டில் P நிலைப்புள்ளி ஆகவும் $AP+PB$-ன் மதிப்பு மிகச் சிறியது ஆகவும் இருப்பின், l ஓடு AP, PB கோடுகள் சம கோணங்களைப் பிறப்பிக்கும் என்று நிறுவுக.

19. சுற்றளவு சொல்லப்பட்ட ஒரு முக்கோணத்தின் பரப்பு மிகக் கூடுதற்கு அக் கோணம் சமபக்க முக்கோணமாதல் வேண்டும் என்று நிறுவுக.

20. ஒரு முறுக்காணியின் திறன் $E=\frac{t\,(1-\mu\;t)}{\mu+t}$; இங்கு μ பிணர்வுக்கெழு (coefficient of function); முறுக்காணியின் கோணத்தின் இருக்கை l) எனின், எந்த t-ன் மதிப்புக்கு அவ் வாணியின் திறன் மிகக் கூடுதலாகும் ?


82. குழிவு, குவிவு, உருமாறும் புள்ளிகள் (Concavity, Conversity points of inflexion).



படம் 18 (i).

P-க்கு அருகில் P இடத்துத் தொடுவரைக்கு மேல் (படம் a, b-ல் காண்பது போல்) இருக்கும் வளைவரை மேனோக்கும் குழிந்த வளைவரை என்றும், தொடுவரைக்குக் கீழ் இருக்கும் வளைவரை (படம் c-d-ல் காண்பது போல்) மேனோக்கும் குவிந்த வளைவரை என்றும் கூறப்படும்.

படம் *e*, *f*-ல் காண்பதுபோல் வளைவரையில் குழிவிலிருந்து குவிவுக்கோ, எதிராகவோ மாறும் இடம் உருமாறும் புள்ளி (Point of inflexion) எனப்படும். இவ் வரையறையால் வளைவரை உருமாறும் புள்ளிகள் தன் தொடுவரையை வெட்டுமென்றும், உருமாறும் புள்ளி மீப்பெரு மதிப்புக்கும் மீச்சிறு மதிப்புக்கும் இடைப்படும் என்றும் விளங்கும்.



படம் 18 (ii).

83. படம் *a*, *b* ஐக் காண்போம்.

வளைவரையிலுள்ளதொரு புள்ளி அதன் வலமாக (குறியின் திசையில்) நகர்ந்து கொண்டே இருப்பின், அவ்விடத்துத் தொடுவரை இடப்பக்கமாகத் தொடுகுறியைச் (point of contact) சுற்றிக்கொண்டே இருக்கும். அப்பொழுது தொடுவரை x ஆயத்தோடு பிறப்பிக்கும் கோணம் கூடிக் கொண்டே இருக்கும். ஆகவே, வளைவரை P-க்கு அருகிலுள்ள எல்லாப் புள்ளிகளிலும் குழிவாக இருப்பதோடு x கூடிக்கொண்டே இருப்பின் வளைவரையின் சாய்வு வீதம் (gradient) அதாவது $\frac{dy}{dx}$ கூடிக் கொண்டே இருக்கும்.

ஆகவே, அதன் வகைக்கெழு மிகையாகும்.

$$\therefore \frac{d^2y}{dx^2} \text{ மிகை ஆகும்.}$$

இவ்வாறே P-ன் அருகிலுள்ள புள்ளிகளில் வளைவரை குவிவாக இருப்பின், x கூடிவரு நிலையில் சாய்வு வீதம் $\frac{dy}{dx}$ குறைந்து கொண்டேவரும், ஆகவே, அதன் வகைக்கெழுவான $\frac{d^2y}{dx^2}$ குறைக்கணியமாகும்.

ஒரு வளைவரை குழிவா, குவிவா என்பதை அதன் இரண்டாவது வகைக்கெழுவின் குறியால் தெளியலாம்—மிகையாயின் குழிவு ஆகும். குறையாயின் குவிவு ஆகும். உருமாறும் புள்ளிகளில் வளைவரை குழிவாகவோ, குவிவாகவோ தம்முள் மாறிக் கொள்ளும். ஆகவே, அப் புள்ளிகளில் $\frac{d^2y}{dx^2}$ குறி மாறும். $\frac{d^2y}{dx^2}$ தொடர்ச்சியுடையதாக இருப்பின் அப் புள்ளிகளில் $\frac{d^2y}{dx^2} = 0$. ஆகவே, உருமாறும் புள்ளிகளில்,

(1) $\frac{d^2y}{dx^2} = 0$

(2) $\frac{d^2y}{dx^2}$-ன் மிகையாகவோ, குறையாகவோ தம்முள் மாறிக் கொள்ளுகிறது. ஆகவே, அப் புள்ளிகளில் $\frac{d^3y}{dx^3}$-ன் மதிப்பு சுன்னமாதல் இல்லை.

பயிற்சி 11.

x-ன் எம் மதிப்புகளுக்குக் குழிவாகவும், குவிவாகவும் $y = 3x^2 - 2x^3$ உள?

$$y = 3x^2 - 2x^3$$

$$\frac{dy}{dx} = 6x - 6x^2$$

$$\frac{d^2y}{dx^2} = 6 - 2x = -6\ (2x-1)$$

$x > \frac{1}{2}$ ஆயின், $\frac{d^2y}{dx^2}$-ன் மதிப்பு குறையாகும்.

ஆகவே, அம் மதிப்புகளுக்கு வளைவரை குவிவாகும்.

$x < \frac{1}{2}$ ஆயின், $\frac{d^2y}{dx^2}$-ன் மதிப்பு மிகையாகும்.

அப்பொழுது வளைவரை குவிவாகும்.

$x = \frac{1}{2}$ ஆயின், $\frac{d^2y}{dx^2} = 0$. ஆகவே, அவ்விடத்தில் வளைவரைக்கு உருமாறும் புள்ளி ஒன்றுண்டு.

அப் புள்ளி $(\frac{1}{2}, \frac{1}{2})$ ஆகும்.

பயிற்சி 12.

$y = \frac{a^2 x}{x^2+a^2}$ என்ற வளைவரையின் உருமாறும் புள்ளிகள் யாவை? அவை ஒரே கோட்டில் உள்ளன என்று நிறுவுக.

$$y = \frac{a^2 x}{x^2+a^2}$$

$$\frac{dy}{dx} = \frac{a^2(a^2-x^2)}{(x^2+a^2)^2}$$

$$\frac{d^2y}{dx^2} = \frac{-2a^2x(3a^2-x^2)}{(x^2+a^2)^3}$$

உருமாறும் புள்ளிகளில் $\frac{d^2y}{dx^2} = 0$

$$\therefore x(3a^2-x^2) = 0$$

ஆகவே, $x = 0$ அல்லது $\pm\sqrt{3}\,a$

$x = 0$ ஆயின் $y = 0.$

$x = +\sqrt{3}a$,, $y = \frac{\sqrt{3}a}{4}$

$x = -\sqrt{3}a$,, $y = \frac{-\sqrt{3}a}{4}$

ஆகவே, உருமாறும் புள்ளிகள் (0, 0), $\left(\sqrt{3}a, \frac{\sqrt{3}a}{4}\right)$ $\left(-\sqrt{3}a, \frac{-\sqrt{3}a}{4}\right)$ இப் புள்ளிகள் $x = 4y$ என்ற கோட்டில் உள.

பயிற்சிகள் 29.

1. கீழ்க்காணும் வளைவரைகளில் உருமாறும் புள்ளிகள் யாவை?

(1) $y = x^4 - 6x + 8x - 1$ (5) $y = a\cos x + b\sin x$

(2) $y = x^3 - 9x + 7x - 6$ (6) $y = \dfrac{x^3}{a^2 + x^2}$

(3) $y = \cos x$

(4) $y = a\sin x + b\cos x$ (7) $xy^2 = a^2(a - x)$

2. $y = k\sin x$ என்ற வளைவரை x ஆயத்தை உருமாறும் புள்ளிகளில் வெட்டும் என்று நிறுவுக.

3. $y = (x - a)(x - b)(x - c)$ என்ற வளைவரையின் உருமாறும் புள்ளிகளைக் காண்க.

4. $y = \dfrac{6x}{x^2 + 3}$ வளைவரையில் உருமாறும் புள்ளிகள் மூன்று உள்ளன என்று நிறுவுக.

5. $y = \dfrac{1 - x}{1 + x}$ என்ற வளைவரையில் உருமாறும் புள்ளிகள் மூன்று உண்டென்றும், அவை ஒரே கோட்டில் அமைந்தன என்றும் நிறுவுக. அக் கோட்டின் சமன்பாட்டினைக் காண்க.

6. $x^2y + a^2(x + y) = a^3$ என்ற வளைவரையின் உருமாறும் புள்ளிகள் $x + 4y = a$ கோட்டில் உள என்று நிறுவுக.

7. $y = ax^3 + bx^2 + cx + d$ வளைவரையின் $x = 1$ என்ற இடத்தில் உருமாறும் புள்ளி ஒன்று இருப்பின், a, b, c, d என்பவற்றின் இடைப்பட்ட தொடர்பு யாது?

7. சார்புகளின் விரிவு

(Expansion of functions)

84. முடிவிலாத் தொடர் (Infinite Series)

$u_1+u_2+u_3+ \ldots\ldots +u_n+ \ldots\ldots \infty$ என்ற முடிவிலாத் தொடரை $\sum\limits_{1}^{\infty} u_n$ என்றோ, $\Sigma\, un$ என்றோ குறிப்பிடுவது மரபு. இத் தொடரில் n உறுப்புகளின் கூட்டுத்தொகை S_n என்று கொண்டால், n-ன் மதிப்பு கூடக்கூட (அஃதாவது முடிவற்ற எண்ணை n நெருங்கும்பொழுது) கீழ்வரும் மூன்று வகைகளுள் ஒன்று அதன் எல்லையாக இருக்கும்:

(1) முடிவுள்ள எண்

(2) எண்ணிலி (infinity)

(3) இரண்டும் இன்மை.

முதல் வகை : S_n, எண்ணிலியை n நெருங்க முடிவுள்ள எல்லையை நெருங்கின், அத் தொடர் எல்லையுள் தொடர் (convergent series) எனப்படும்.

இரண்டாவது வகை : S_n-ன் எல்லை எண்ணிலியாய் இருப்பின், அத் தொடர் எல்லையிலாத் தொடர் (divergent series) என்று கூறப்படும்.

மூன்றாவது வகை : இவ்விரெல்லையும் இல்லாதது, நேரப் பெருத் தொடர் (oscillatory series) எனப்படும். எடுத்துக்காட்டாக, $1 + x + x^2 + \ldots \infty$ என்ற பெருக்கத் தொடரைப் (Geometric series) பார்ப்போம்.

$$S_n = 1 + x + x^2 + \ldots\ldots + x^{n-1}$$

$$= \frac{1 - x^n}{1 - x}$$

இங்கு x-ன் எண் மதிப்பு ஒன்றினுங் குறைவாயின்,

$$\underset{n \to \infty}{\text{Lt}} S = \frac{1}{1 - x}$$

ஆகவே, இப் பெருக்கத்தொடர் x-ன் இம் மதிப்புக்கு ஓர் எல்லையுள் தொடர் ஆகும்.

x-ன் எண் மதிப்பு ஒன்றினும் கூடுதலாயின்,

$$\underset{n \to \infty}{\text{Lt}} S_n = \infty$$

ஆகவே, இங்கு அது ஓர் எல்லையிலாத் தொடர் ஆகும்.

$x = +1$ எனின், $S_n = 1 + 1 + 1 + \ldots\ldots + 1$

$$= n.$$

$$\therefore \underset{n \to \infty}{\text{Lt}} . S_n = \infty$$

ஈண்டும் பெருக்கத்தொடர் எல்லையிலாத் தொடராகும்.

$x = -1$ எனின்,

தொடர் $1 - 1 + 1 - 1 + 1 - 1 + \ldots\ldots$ என்று ஆகும்.

ஆகவே, ஒரு தொடரின் n உறுப்புகளது கூட்டுத்தொகை காண இயன்றுல், அதன் எல்லையினுல் அத் தொடர் எல்லையுள் தொடரா, அன்றி எல்லையிலாத் தொடரா என்று அறிதல் முடியும். ஆனல், n உறுப்புகளின் கூட்டுத் தொகை காண்பது எளிதன்று. ஒருக்கால் அது காணக் கூடுமேனும், அதன் எல்லையைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஆகவே, இம் முறை எவ்விடத்தும் மேற்கொள்ளுதற்குரியதன்று. ஒரு தொடர் எவ்வகையைச் சார்ந்தது என்றறிவதற்குப் பல விதிகள் உள. அவற்றை இயற்கணித நூலிற் காண்க.

85. எல்லையுள் தொடரின் வரையறையினால் பின்வரும் உண்மைகள் விளங்கும்:

$u_1 + u_2 + u_3 + \ldots\ldots\ldots u_n + \ldots\ldots\ldots$ ஒரு முடிவிலாத்தொடர் என்றும், அதன் n உறுப்புகளின் கூட்டுத்தொகை S_n என்றும் கொள்வோம்.

$\underset{n \to \infty}{\mathrm{Lt}} [S - S_n] = 0$ என்று இருக்குமாறு S என்ற முடிவுள்ள மதிப்புக் காண இயலின், அத் தொடர் ஓர் எல்லையுள் தொடராகும். அதன் மதிப்பும் S ஆகும்.

86. டெயிலரின் தேற்றம் (Taylors' Theorem)

5ஆவது அதிகாரத்தில், 65ஆவது பகுதியில்

$$f(x) = f(a) + (x - a) f'(a) + \frac{(x - a)^2}{2!} f''(a) + \ldots\ldots\ldots +$$

$$\frac{(x - a)^n}{n!}$$

$f_n (a + x - a\,\theta)$ என்ற பொதுப்படை இடைமதிப்புத் தேற்றம் நிறுவப்பட்டது. இச் சமன்பாட்டில் n உறுப்புகளின் கூட்டுத் தொகை $S_n(x)$ என்றும், இறுதிக்கண் நிற்கும் உறுப்பை $R_n(x)$ என்றும் குறிப்பின்,

$$f(x) = S_n(x) + R_n(x)$$

$R_n(x) = \frac{(x - a)^n}{1!n}$, $f_n (a + x - a\,\theta)$. இது லெக்ராஞ்சின் வகை மீதி (Lagrange's form of remainder) எனப்படும்.

87. கோசியின் வகை மீதி (Cauchy's form of Remainder)

$$F(x) = f(x) - (b - x) f'(x) - \frac{(b - x)^2}{2!} f''(x) \ldots$$

$$\ldots - \frac{(b-x)^n}{(n-1)!} f^{n-1}(x) - (b - x)R \text{ என்றும்,}$$

$$F'x = f(b) - f(a) f'(a) - \frac{(b - a)^2}{2!} f''(a) \ldots - (b - a)R$$

என்றும் கொள்வோம்.

அப்பொழுது, $F(a) = 0$, $F(b) = 0$

ஆகவே, a, b என்பவற்றின் இடைப்பட்ட x-ன் யாதொரு மதிப்புக்கேனும் $F'(x)$ சுன்னமாகும். அம் மதிப்பு x என்று கொள்ளின்,

$$F''(x_1) = 0$$

$F(x)$-ன் வகைக்கெழு காணின்,

$$F'(x) = -f'(x) + f'(x) - (b-x)f''(x) + (b-x)f''(x) \ldots$$

$$-\frac{(b-x)^{n-1}}{(n-1)!} f^n(x) + R$$

$$= R - \frac{(b-x)^{n-1}}{(n-1)!} f^n(x)$$

$F'(x_1) = 0$ ஆகவே, $R = \dfrac{(b-x_1)^{n-1}}{(n-1)!} f^n(x_1)$

x_1-க்குப் பதில் $a + \theta(b-a)$ என்று எழுதின்,

$0 < \theta < 1$; $b - x_1 = b - a - \theta(b-a)$

$$= (b-a)(1-\theta)$$

$$\therefore R = \frac{(b-a)^{n-1}(1-\theta)^{n-1}}{(n-1)!} f^n\{a+\theta(b-a)\}.$$

$$\therefore f(b) = f(a) + (b-a)f'(a) + \frac{(b-a)}{2!} f''(a) + \ldots$$

$$+ \ldots + \frac{(b-a)^{n-1}}{(n-1)!} f^{n-1}(a) + \frac{(b-a)^n (1-\theta)^{n-1}}{(n-1)!}$$

$$f^n(a+\theta\,\overline{b-a})$$

இங்கு b-க்குப் பதில் x என்று எழுதின்,

$$(x) = f(a) + (x-a)f'(a) + \frac{(x-a)^2}{2!} f''(a) + \ldots$$

$$+ \frac{(x-a)^{n-1}}{(n-1)!} f^{n-1}(a) + \frac{(x-a)^n (1-\theta)^{n-1}}{(n-1)!}$$

$$f_n\{a + \overline{x-a}\theta\}$$

$$f(x) = S_n(x) + R_n(x)$$

$R_n(x) = \dfrac{(x-a)^n (1-\theta)^{n-1}}{(n-1)!} f^n(a + \overline{x-a}\theta)$. இங்கு $a < b < 1$. இது கோசியின் வகை மீதி எனப்படும்.

88. டெயிலர், மெக்லாரின் தொடர்கள் (Taylor's and Maclaurin's Series)

86, 87 பகுதிகளில் $f(x) = S_n(x) + R_n(x)$

$$\therefore f(x) - S_n(x) = R_n(x)$$

$R_n(x)$-ன் எல்லை சுன்னமாயின்,

$$\underset{n \to \infty}{\mathrm{Lt}} \left\{ f(x) - S_n(x) \right\} = \underset{n \to \infty}{\mathrm{Lt}} R_n(x)$$

$$= 0.$$

ஆகவே, முடிவற்ற எண்ணை n நெருங்கும்போது $f(x)$ முடிவிலா எல்லையுள் தொடராகும்.

$$f(x) = f(a) + (x-a)f'(a) + \frac{(x-a)^2}{(n!)} f''(a) + \dots \infty.$$

இது டெயிலரின் தொடர் எனப் பெயர் பெறும்.

$\therefore$ இங்கு $a = 0$ என்று கொள்ளின்,

$$f(x) = f(0) + xf'(0) + \frac{x^2}{2!} f''(0) + \dots\dots +$$

$$\frac{x_n}{n!} f^n(0) + \dots\dots \infty$$

இது மெக்லாரின் தொடர் எனப் பெயர் பெறும்.

இத் தொடர்கள் சார்புகளின் விரிவுகாணப் பெரிதும் பயன்படும்.

பயிற்சி 1.

sin x–ன் விரிவினைக் காண்க.

$f(x) = \sin x$ என்று கொள்வோம்.

$f(x) = f(0) + x f'(0) + \frac{x^2}{2!} f''(0) + \dots\dots$ எனின்,

இங்கு $R_n(x) \to 0$ என்று இருத்தல் வேண்டும்.

$$f(x) = \sin x \qquad f(0) = 0$$
$$f'(x) = \cos x \qquad f'(0) = 1$$
$$f''(x) = \sin x \qquad f''(0) = 0$$
$$f'''(x) = -\cos x \qquad f'''(0) = -1$$

$$f^n(x) = \sin\left(x + \frac{n\pi}{2}\right)$$

$$R_n(x) = \frac{x^n}{n!} f^n(\theta x)$$

$$= \frac{x^n}{n!} \sin\left(x + \frac{n\pi}{2}\right)$$

$\sin\left(x + \frac{n\pi}{2}\right)$ எப்பொழுதும் ஒன்றைவிடக் கூடுதலாக இராது. மேலும், $\underset{n \to \infty}{\text{Lt}} \frac{x^n}{n!} = 0.$

ஆகவே, $\underset{n \to \infty}{\text{Lt}} R_n(x) = 0.$

$$\therefore \sin x = x - \frac{x^3}{3!} + \frac{x^5}{5!} + \ldots \infty$$

இது போன்ற $\cos x = 1 - \frac{x^2}{2!} + \frac{x^4}{4!} - \ldots \infty$

பயிற்சி 2.

e^x-ன் விரிவு :

$$f(x) = e^x \qquad f(0) = 1$$
$$f'(x) = e^x \qquad f'(0) = 1$$
$$f''(x) = e^x \qquad f''(0) = 1$$
$$f^n(x) = e^x \qquad f^n(\theta x) = e^{\theta x}$$

$$R_n(x) = \frac{x^n}{n!} e^{\theta x}$$

$$\underset{n\to\infty}{\text{Lt}}\, R_n(x) = e^{\theta^n}\, \underset{n\to\infty}{\text{Lt}}\, \frac{x^n}{n!} = 0.$$

$$\therefore\ e^x = 1 + x + \frac{x^2}{2!} + \frac{x^3}{3!} + \ldots \infty$$

பயிற்சி 3.

$\log(1+x)$-ன் விரிவினைக் காண்க.

$f(x) = \log(1+x)$ என்று கொள்வோம்.

$$f(x) = \log(1+x) \qquad f(0) = \log 1 = 0$$

$$f'(x) = \frac{1}{1+x} \qquad f'(0) = 1$$

$$f''(x) = -\frac{1}{(1+x)^2} \qquad f''(0) = -1$$

$$f'''(x) = \frac{1\cdot 2}{(1+x)^3} \qquad f'''(0) = 1\cdot 2$$

$$f^n(x) = \frac{(-1)^{n-1}(n-1)!}{(1+x)^n} \qquad f^n(\theta x) = \frac{(-1)^{n-1}(n-1)!}{(1+\theta x)^n}$$

$$\therefore\ R_n(x) = \frac{x^n}{n!}\,\frac{(-1)^{n-1}(n-1)!}{(1+\theta x)^n}$$

$$= (-1)^{n-1}\,\frac{1}{n}\left(\frac{x}{1+\theta x}\right)^n$$

x-ன் மிகையாக > 1 என்றிருப்பின் $\frac{x}{1+\theta x} < 1$

ஆகவே, முடிவற்ற எண்ணை n நெருங்கும்பொழுது

$$\left(\frac{x}{1+\theta x}\right)^n \to \theta$$

மேலும், $\underset{n\to\infty}{\text{Lt}}\, \frac{1}{n} = 0$

ஆகவே, $R_n(x) = 0$

x-ன் மதிப்பு குறை எண்ணுயின் $\frac{x}{1+\theta x} < 1$ என்று இருத்தல் வேண்டும் என்பது இல்லை. ஆகவே, முந்தின தெரிப்பு ஈண்டுப் பொருந்தாது.

கோசியின் வகை மீதிப்படி,

$$R_n(x) = (-1)^{n-1} \frac{x^n (1-\theta)^{n-1}}{\underline{|n-1}} \frac{(n-1)!}{(1+\theta x)^n}$$

$$= (-1)^{n-1} \frac{x^n}{(1+\theta x)} \left(\frac{1-\theta}{1+\theta x}\right)^{n-1}$$

x-ன் எண் மதிப்பு அஃதாவது $|x| < 1$ எனின்,

$$1-\theta < 1+\theta x$$

$$\therefore \frac{1-\theta}{1+\theta x} < 1$$

ஆகவே, $\underset{n\to\infty}{\text{Lt}} \left(\frac{1-\theta}{1+\theta x}\right)^{n-1} \to 0.$

மேலும், $x^n \to 0$ ஏனெனில், $|x| < 1$.

$(1+\theta x)$-ன் மதிப்பு நிலை எண்ணுகும்.

$$\underset{n\to\infty}{\text{Lt}} R_n(x) = 0.$$

ஆகவே, $|x| < 1$ என்றிருப்பின்,

$\log(1+x) = x - \frac{1}{2}x^2 + \frac{1}{3}x^3 - \ldots\ldots\ldots$

பயிற்சி 4.

$(1+x)^m$-ன் விரிவினைக் காண்க.

$(f) = (1+x)^m$ என்று கொள்வோம்.

$f(x) = (1+x)^m, \qquad f(0) = 1$

$f'(x) = m(1+x)^{m-1} \qquad f'(0) = m$

$f''(x) = m(m-1)(1+x)^{m-2} \; f''(0) = m(m-1)$

$$f^n(x) = m(m-1)\dots(m-n+1)\ (1+x)^{m-n}$$

$$\therefore\ f^n(\theta x) + m(m-1)\dots(m-n+1)\ (1+\theta x)^{m-n}$$

m ஒரு மிகை முழு எண்ணுயின், $f(x)$-ன் தொடரில் $(m+1)$ உறுப்புகள் இருக்கும். ஏனெனில், $n > m$ என்றிருக்கையில் $f^n(x) = 0$.

m ஒரு மிகை முழு எண்ணுக இல்லாவிடின், $R_n(x)$-ன் எல்லையைக் காணல் வேண்டும். கோசியின் வகை மீதிப்படி

$$R_n(x) = \frac{m(m-1)\dots(m-n+1)\,x^n(1+\theta)^{n-1}}{(n-1)!}(1+\theta x)^{m-n}$$

முடிவிலாத் தொடர்.

$$1 + mx + \frac{m(m-1)}{2!}x + \dots\dots$$

$|x| > 1$ என்றிருக்கையில் எல்லையில் தொடராகும். ஆகவே, $|x| < 1$ என்று வரும் x-ன் மதிப்புகளைக் கண்டாற் போதும்.

$$R_n(x) = mx(1+\theta x)^{m-1}\left(\frac{1-\theta}{1+\theta x}\right)^{n-1}$$

$$\frac{(m-1)(m-2)\dots(m-n+1)}{(n-1)}x^{n-1}$$

$mx(1+\theta x)^{m-1}$ ஒரு முடிவுள்ள தொகையாகும்.

$|x| < 1$ எனின், $\dfrac{1-\theta}{1+\theta x} < 1$

ஆகவே, $\underset{n\to\infty}{\text{Lt}}\left(\dfrac{1-\theta}{1+\theta x}\right)^{n-1} \to 0$

$$\frac{(m-1)(m-2)\dots(m-n+1)}{n-1}x^{n-1}$$

கீழ்வரும் எல்லையுள் தொடரின் n ஆவது உறுப்பு

$$1+(m-1)x+\frac{(m-1)(m-2)}{\underline{|2}}x^2+\ldots\ldots$$

ஆகவே, அதன் எல்லை சுன்னமாகும்.

$$\therefore \underset{n\to\infty}{\text{Lt}} R_n(x)=0$$

$$\therefore \quad (1+x)^m=1+mx+\frac{m(m-1)}{2!}x^2+\ldots\ldots\infty$$

இங்கு $|x|<1$

பயிற்சி 5.

$$e^x \cos x = 1 + 2^{1/2} \cos\frac{\pi x}{4} + 2^{2/2}.\cos\frac{2\pi}{4}.\frac{x^2}{\underline{|2!}} +$$

$$2^{3/2}\cos.\frac{3\pi}{4}.\frac{x^2}{\underline{|3!}}+\ldots\ldots+2^{n/2}\cos\frac{n\pi.x^n}{4\,n!}+\ldots\ldots$$

என்று நிறுவுக.

$f(x) = e^x \cos x$ என்று கொள்வோம்.

அப்பொழுது, $f(x) = e_x.\dfrac{e^{ix}+e^{-ix}}{2}$

$$=\frac{e^{x(1+i)}+e^{x(1-i)}}{2}$$

$$\therefore \quad f^n(x)=\frac{(1+i)^n e^{x(1+i)}+(1-i)^n e^{x(1-i)}}{2}$$

$$f^n(0)=\frac{(1+i)^n+(1-i)^n}{2}$$

$$=\frac{n}{2^2}\cos\frac{n\pi}{4}$$

$$\therefore \quad e^x\cos x=f(0)+xf'(0)+\frac{x^2}{2!}.\ f''(0)+\ldots\ldots$$

$$+\frac{x^n}{2!}f^n(0)+\ldots\ldots\ldots$$

$$= 1 + 2^{1/2} \cos \frac{\pi}{4} x + 2^{2/2}. \cos \frac{2\pi}{4}. \frac{x^2}{2!} + \cdots$$

$$+ 2^{n/2}. \cos \frac{n\pi}{4}. \frac{x^n}{n!} + \cdots\cdots$$

89. தொடர்களுக்கு வகைக்கெழு கண்டு அதனுல் சில சார்புகட்கு விரிவு காணமுடியும். இம் முறையைக் கையாளுவதற்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. அவற்றையெல்லாம் இங்கு விரியாது அம் முறையைப் பயன்படுத்தும் வகையை மட்டும் காண்போம்.

பயிற்சி 6.

$|x| < 1$ என்றிருப்பின் $\tan^{-1} x$-ன் விரிவை ஓர் ஏறுந் தொடராகக் காண்க.

$f(x) \tan^{-1} x = a_0 + a_1 x + a_2 x^2 + \ldots\ldots\ldots$ என் கொள்வோம்.

அப்பொழுது $f'(x) = \dfrac{1}{1+x^2} = a_1 + 2a_2 x + 3a_3 x^2 + \ldots\ldots$

மேலும், $(1 + x)^{-1} = 1 - x^2 + x^4 - x^6 + \ldots\ldots \infty$.

இவ்விரு விரிவுகளையும் ஒப்பிட்டுப்பார்ப்பின்,

$$a_2 = a_4 = a_6 = a_8 = \ldots = 0$$

$$a_1 = 1, 3a_3 = -1, 5a_5 = 1 \ldots.$$

மேலும், $a_0 = \tan^{-1}{}_0$. சிறந்த மதிப்பை மட்டும் எடுப்பின்,

$$a_0 = 0$$

$$\therefore \tan^{-1} x = x - \tfrac{1}{3} x^3 + \frac{1}{5} x^5 - \ldots\ldots \infty$$

இங்கு $|x| < 1$. ஏனெனில், அப்பொழுதுதான் $(1+x^2)^{-1}$-ன் விரிவு காணவியலும்.

இத் தொடர் கிரகரித்தொடர் (Gregory's series) என்று கூறப்படும்.

பயிற்சி 7.

$\sin^{-1} x$-ன் விரிவு காண்க.

$$f(x) = \sin^{-1} x = a_0 + a_1 x + a_2 x^2 + a_3 x^3 + \ldots\ldots\ldots\ldots$$
என்று கொள்வோம்.

$$\therefore f_1(x) = \frac{1}{\sqrt{1 - x^2}} = a_1 + 2a_2 x + 3a_3 x^2 + \ldots\ldots\ldots\ldots$$

$$\text{ஆனல்,}\ \frac{1}{\sqrt{1 - x^2}} = 1 + \tfrac{1}{2} x + \frac{1\cdot3}{2\cdot4} x^4 + \ldots\ldots\ldots\ldots$$

இவ்விரு தொடர்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பின்,

$$a_2 = a_4 = a_6 = \ldots\ldots\ldots = 0$$

$$a_1 - 1,\ 3\,a_3 = \tfrac{1}{2},\ 5\,a_5 = \frac{1\cdot3}{2\cdot4},\ \ldots\ldots\ldots$$

மேலும் $a = \sin^{-1} 0 = 0$

$$\therefore \sin^{-1} x = x + \tfrac{1}{2}\cdot\frac{x^3}{3} + \frac{1\cdot3\ x^5}{2\cdot4\ 5} + \frac{1\cdot3\cdot5\ x^7}{2\cdot4\cdot6\ 7} + \ldots$$

30. வகைக்கெழு சமன்பாடுகளைப் (differential equations) பயன்படுத்திச் சில சார்புகளுக்கு விரிவு காணும் முறை பின்வரும் பயிற்சிகளால் தெளிவுறும்.

பயிற்சி 8.

$\tan^{-1} x$-ன் விரிவு காண்க.

$y = \tan^{-1} x$ என்று கொள்வோம்.

$$y_1 = \frac{1}{1 + x^2}$$

$$\therefore y_1 (1 + x^2) = 1.$$

இச் சமன்பாட்டின் முறை n வகைக்கெழு காணின்,

$$(1 + x^2) y_{n+1} + 2 n x y_n + n (n-1) y_{n-1} = 0$$

இங்கு $x = 0$ என்று கொண்டால்,

$$(y_{n+1})_{x=0} = -n (n - 1) (y_{n-1})_{x=0} \qquad \ldots (1)$$

மேலும், $(y)_{x=0} = 0,\ (y_1)_{x=0} = 1$

(1)-ல் n-க்குப்பதில் 2, 3, 4, 5, ... எடுப்பின்,

$$(y_3)_{x=0} = -2\cdot1\,;\ (y_1)_0 = -2!\ 1;\ (y)_{x=0} = 0$$

$$(y_5)_{x=0} = -4\cdot3\,(y)_0 = 4!\ ;\ (y_4)_{x=0} = -3\cdot2\,(y)_0 = 0$$

$$(y_7)_{x=0} = -6\cdot5\,(y_5)_0 = -6!\quad (y_6)_{x=0} = 0.$$

எல்லா இரட்டைக் கெழுவின் மதிப்பும் சுன்னமாகும். ஆகவே, $\tan^{-1}$-ன் விரிவு x-ன் ஒற்றைப்படி அடங்கிய உறுப்புகள் கொண்டதாகும்.

மெக்லாரின் தேற்றப்படி,

$$\tan^{-1} x = x - 2!\ \frac{x^3}{3!} + 4!\ \frac{x^5}{5!} \ldots\ldots$$

$$= x - \frac{1}{3}x^3 + \frac{1}{5}x^5 - \ldots\ldots \text{ என்று வரும்.}$$

பயிற்சி 9.

$\cos(m \sin^{-1}x)$-ன் விரிவு காண்க.

$$y = \cos(m \sin^{-1} x) = \alpha_0 + \alpha_1 x + \alpha_2 \frac{x^2}{2!} + \alpha_3 \frac{x^3}{3!} + \ldots\ldots$$

என்று கொள்வோம்.

$$\alpha_0 = (y)_{x=0} = \cos(m \sin^{-1}x) = 1$$

$$y_1^2 = -\sin(m \sin^{-1}x).\ \frac{m}{\sqrt{1-x}} \qquad \ldots (2)$$

$$y_1(1-x^2) = m^2 \sin^{-2}(m \sin^{-1}x)$$

$$= m^2(1-y^2)$$

இச் சமன்பாட்டின் வகைக்கெழு காணின்,

$$(1-x^2)\,2y_1y - 2xy_1^2 = -2yy_1m^2$$

$$\therefore\ (1-x^2)\,y - xy_1 + m^2y = 0 \qquad \ldots (3)$$

இதன் n முறை வகைக்கெழு எடுப்பின்,

$$(1-x^2)\,y_{n+2} + 2 - (2n+1)xy_{n+2} + (m-n)y_{n-0} \qquad \ldots (4)$$

இங்கு $x = 0$ என்று கொண்டால்,

$$(y_{n+2})_{x=0} = -(m^2 - n^2)(y_n)_{x=0} \qquad \ldots (5)$$

$$y = \alpha_0 + \alpha_1 x + \alpha_2 \frac{x^2}{2!} + - \ldots + \alpha_n \frac{x^n}{n!} + \ldots$$

இங்கு $y_{n+2} = \alpha_{n+2} + \alpha_{n+3} + \ldots$

ஆகவே, $(y_{n+2})_{x=0} = \alpha_{n+2}$

இது போன்றே $(v_n)_{x=0} = \alpha_n$

$(y_1)_{x=0} = \alpha_1$

(5)-ல் இருந்து $\alpha_{n+0} = -(m^2 - n)\alpha_n \qquad (6)$

(2)-ல் இருந்து $\alpha_1 = 0$

(3)-ல் இருந்து $\alpha_2 = -m^2 \delta$

(6)-ல் இருந்து $\alpha_3 = -(m^{\cdot} - 1^2)\alpha_1 = 0$

இவ்வாறே, $\alpha_1 = \alpha_3 = \alpha_5 = \alpha_7 = \ldots = 0$

$\alpha_4 = -(m^2 - 2^2)\alpha_2 = m^2(m^2 - 2^2)$

$\alpha_3 = -(m^2 - 4^2)\alpha_3 = -m^2(m^2 - 2)(m^2 - 4^2)$

ஆகவே, $\cos(m \sin^{-1}x) = 1 - m^2\delta \frac{x^2}{2!} + \frac{m^2(m^2-2^2)}{4!}.x^4$

$$- \frac{m^2(m^2-2^2)(m^2-4^2)(m^2-6^2)}{6!}.x^6 + \ldots$$

இங்கு $x = \sin\theta$ என்று கொண்டால்,

$$\cos m\theta = 1 - \frac{m^2}{2!}\sin^2\theta + \frac{m^2(m^2-2^2)}{4!}\sin^4\theta \ldots \infty$$

பயிற்சிகள் 30.

1. பின்வரும் சார்புகட்கு விரிவுகளை மெக்லாரின் தேற்றத்தைப் பயன்படுத்திக் காண்க.

(1) $\tan x$	(6) $e \sin x$
(2) $x \cos x$	(7) $e^x \sin x$
(3) $\sec x$	(8) $\cos x \cosh x$
(4) $e^x \sec x$	(9) $\sin x \sinh x$
(5) $\log(1 + e^x)$	(10) $\log \sec x$

2. $x \cot x = 1 - \frac{x^2}{3} - \frac{x^4}{4^5} - \frac{2x^6}{945} \ldots\ldots$

$$\cos x \sin h\, x = x - \frac{1}{3} x^3 - \frac{1}{30} x^5 \ldots\ldots$$

$$\tan\left(x + \frac{\pi}{4}\right) = 1 + 2x + 2x^2 + \frac{8}{3}x^3 + \frac{10}{3}x^4 + \ldots$$

$$\log(1 + \sin x) = x - \tfrac{1}{2} x^2 + \tfrac{1}{6} x^3 \ldots$$

$\log(1 + x + x^2) + x + \frac{1}{2} x^2 - \frac{2}{3} x^3 + \frac{1}{4} x^4 \ldots$ என்று நிறுவுக.

3. பின்வரும் விரிவுகளை மெய்ம்மைப்படுத்துக :

(1) $\sin(x + \alpha) = \sin \alpha + x \cos \alpha - \frac{x^2}{2!} \sin \alpha - \cos \frac{x^3}{3!}$

(2) $\tan(x+a) = \tan a + \sec^2 a + x \sec^2 a + \tan \infty.$

(3) $\tan^{-1}(1 + x) = \frac{\pi}{4} + \frac{1}{2}x - \frac{1}{4}x^2 + \frac{1}{12}x^3 \ldots$

4. $\sin(m \sin^{-1} x) = mx - \frac{m(m^2 - 1^2)}{3!}x^3 + \frac{m(m^2 - 1^2)(m^2 - 3^2)}{5!}x^5 - \frac{m(m^2 - 1^2)(m^2 - 3^2)(m^2 - 5^2)}{7!}x^7 \ldots$

என்று நிறுவுக.

5. $(\sin^{-1} x)^2 = \frac{2x^2}{2!} + \frac{2^2}{4!} \cdot 2x^4 + \frac{2^2 . 4^2}{6!} \cdot 2x^6 + \frac{2^2 . 4^2 . 6^2}{8!} 2x^8 + \ldots$ என்று நிறுவுக.

6. $\frac{(\sin^{-1} x)^2}{2!} = \frac{x^2}{2} + \frac{2\,x^4}{3 . 4} + \frac{2.4\,x^6}{3.5.6} + \frac{2.4.6}{3.5.7}x^8 \ldots$

என்று நிறுவுக.

7. $e^{a\sin^{-1}x} = a_0 + a_1 x + a_2 x^2 + a_3 x^3 + \ldots\ldots\ldots\ldots$ என்றிருப்பின்.

(1) $a_{n+2} = \dfrac{n^2 + a^2}{(n+1)(n+2)} a_n$ என்றும்,

(2) $e^{a\sin^{-1}x} = 1 + ax + \dfrac{a^2 x^2}{2!} + \dfrac{a(a^2+1)}{3!} x^3$

$+ \dfrac{a^2(a^2+2^2)}{4!} x^4 + \ldots$ என்றும் நிறுவுக.

8. $e^x \sin x$-ன் விரிவில் x^n-ன் வகைக்கெழு a_n ஆயின்

$$a_n - \frac{a_{n-1}}{1!} + \frac{a_{n-2}}{2!} - \frac{a_{n-3}}{3!} + \ldots\ldots \frac{\sin\frac{n\pi}{2}}{n!}$$

என்று நிறுவுக.

9. $e^{x\cos a}\cos(x\sin a) = 1 + x\cos a + \dfrac{x^2}{2!}\cos 2a$

$+ \dfrac{x^3}{3!}\cos 3a + \ldots\ldots$ என்று நிறுவுக.

10. $\sin\left(\dfrac{\pi}{4} + \theta\right)$-ன் விரிவை θ-ன் படிகள் அடங்கிய தொடராகுமாறு காண்க.

8. பகுப்பு வகைக்கெழு காணுதல்
(Partial Differentiation)

91. பல மாறிகள் அடங்கிய சார்புகள்

இதுவரை ஒரு மாறி அடங்கிய சார்பைப் பற்றியே கற்றோம் ஆனால், ஒன்றுக்குமேல் பல மாறிகள் அடங்கிய சார்புகள் இருப்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக நீண்டதொரு சதுரத்தின் பரப்பு என்பது நீளம், அகலம் ஆகிய இருமாறிகள் அடங்கிய ஒரு சார்பு ஆகும். ஒரு முப்போகுக்கட்டி (parallelopiped) யின் கன அளவு நீளம், அகலம், உயரம் ஆகிய மும்மாறிகள் அடங்கிய ஒரு சார்பாகும்.

$u = f(x, y)$ என்று கொள்வோம். இங்கு x, y என்பன ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரண்டு மாறிகள். x, y தனித்தனியாகவே, ஒரே சமயத்துச் சேர்ந்தோ மாறலாம், மாறும் வகைகள் மூன்றுக்கும் தகுந்தாற்போல் u-ன் மாற்றங்களும் வேறுபட்டே வரும். எடுத்துக்காட்டாக 10 அடி நீளமும். 6 அடி அகலமும் உடைய நீள் சதுரத்தின் பரப்பு 60 ச. அடி ; நீளம் ஓர் அடி கூடின், பரப்பு 6 ச. அடி கூடும்; அகலம் ஓர் அடி கூடின். பரப்பு 10 சதுர அடி கூடும்; நீளமும் அகலமும் ஒவ்வோர் அடி கூடின், பரப்பும் 17 ச. அடி கூடும்.

x, y என்பவை தம்முட் சார்புடையனவல்ல. ஆதலின், அவற்றின் தனித்தனி மதிப்பு, ஒன்று நிலை எண்ணுயின் பிறிதொன்று மாறுதலும் உண்டு என்று கொள்ளலாம்.

x, y-ன் மதிப்புகள் முறையே $x + \Delta x$, $y + \Delta y$ ஆக மாறும் பொழுது, u-ன் மதிப்பு $f(x + \Delta x, y + \Delta y)$, அப்பொழுது, u-ன் மதிப்பு தனித்து $x + \Delta x$ ஆக மாறின், u-ன் மதிப்பு அந் நிலையில் $f(x + \Delta x, y)$.

u-ன் மதிப்பு மாற்றம் $= f(x + \Delta x, y) - f(x, y)$

y-ன் மதிப்பு தனித்து $y + \Delta y$ ஆக மாறின்,

u-ன் மதிப்பு மாற்றம் $= f(x, y + \Delta y) - f(x, y)$.

92. பகுப்பு வகைக் கெழுக்கள் (Partial differential co-efficients)

y-ன் மதிப்பு நிலையுடையதாகவும், x-ன் மதிப்பு மாறுவதாகவும் கொண்டு, xஐப் பொறுத்த u-ன் வகைக்கெழுவைக் காணலாம். இக்கெழு xஐப் பொறுத்த u-ன் பகுப்பு வகைக்கெழு எனப்படும். இதற்கு $\frac{\delta u}{\delta x}$ என்பது குறியீடு.

$$\text{ஆகவே, } \frac{\delta u}{\delta x} = \underset{\Delta x \to 0}{\text{Lt}} \frac{f(x + \Delta x, y) - f(x, y)}{\Delta x}$$

இவ்வாறே x-ன் மதிப்பு நிலைத்ததாகவும், y-ன் மதிப்பு மாறுவதாகவும் கொண்டு yஐப் பொறுத்த u-ன் வகைக்கெழு காணலாம். இக் கெழு yஐப் பொறுத்த u-ன் வகைக் கெழு எனப்படும்.

$$\frac{\delta u}{\delta y} = \underset{\Delta y \to 0}{\text{Lt}} \frac{f(x, y + \Delta y) - f(x, y)}{\Delta y}$$

$\frac{\delta u}{\delta x}$-க்கு $f'x$ என்றும், $\frac{\delta f}{\delta y}$-க்கு $f'y$ என்றும் குறியீடுகள் அமைத்துள்ளனர்.

93. தொடர் பகுப்பு வகைக்கெழுக்கள் (Successive partial differential co-efficients)

$u = f(x, y)$ என்ற சார்பைக் காண்போம். பெரும்பாலும் $\frac{\delta u}{\delta x}$, $\frac{\delta u}{\delta y}$ என்ற u-ன் முதல் வகைக்கெழுக்கள் x, y அடங்கிய சார்புகளாகும். இவற்றின் xஐப் பொறுத்த அல்லது

yஐப் பொறுத்த தொடர் வகைக் கெழுவைக் காணலாம். x தனித்து மாறுவதாகக் கொண்டால், அவை

$$\frac{\delta^2 u}{\delta x^2}, \frac{\delta^3 u}{\delta y^3}, \; \cdots \cdots \; \frac{\delta^n u}{\delta x^n}.$$

y தனித்து மாறுவதாகக் கொண்டால், அவை

$$\frac{\delta^2 u}{\delta y^2}, \frac{\delta^3 u}{\delta y^3}, \; \cdots \cdots \; \frac{\delta^n u}{\delta y_n}.$$

yஐ நிலையாக வைத்து xஐப் பொறுத்த u-ன் வகைக்கெழு கண்டு, அதற்குப்பின் yஐப் பொறுத்த பகுப்பு வகைக்கெழு காணின் வருவது $\frac{\delta}{\delta y}\left(\frac{\delta u}{\delta x}\right)$. இதற்கு $\frac{\delta u}{\delta y.\delta x}$ என்பது குறியீடு.

xஐப் பொறுத்த u-ன் இரண்டாவது பகுப்பு வகைக்கெழு கண்டு, அதற்குப்பின் yஐப் பொறுத்த பகுப்பு வகைக்கெழு காணின் வருவது $\frac{\delta^3 u}{\delta y \cdot \delta y^2}$ என்று எழுதப்படும்.

இவ்வாறே, yஐ நிலையாக வைத்து, xஐப் பொறுத்த $\frac{\delta u}{\delta y}$-ன் பகுப்பு வகைக்கெழு $\frac{\delta^2 u}{\delta x \cdot \delta y}$ என்று குறிப்பிடப்படும்.

பெரும்பாலும் எல்லாச் சார்புகளிலும். $\frac{\delta^2 u}{\delta x \cdot \delta x} = \frac{\delta^2 u}{\delta y \cdot \delta x}$ என்று இருப்பது காணத்தக்கது.

பயிற்சி 1.

$u = \sin(ax + by + cz)$-ன் பகுப்பு வகைக்கெழுவைக் காண்க.

$$\frac{\delta u}{\delta x} = a \cos(ax + by + cz)$$

$$\frac{\delta u}{\delta y} = b \cos(ax + by + cz)$$

$$\frac{\delta u}{\delta z} = c \cos(ax + by + cz)$$

பயிற்சி 2.

$$u = \frac{xy}{x+y}$$ என்றிருப்பின், $x\frac{\delta u}{\delta x} + y\frac{\delta u}{\delta y} = u$ என்று

நிறுவுக.

$$\frac{\delta u}{\delta x} = \frac{(x+y)y - xy}{(x+y)^2} = \frac{y^2}{(x+y)^2}$$

இவ்வாறே,

$$\frac{\delta u}{\delta y} = \frac{x^2}{(x+y)^2}$$

$$\therefore x\frac{\delta u}{\delta x} + y\frac{\delta u}{\delta y} = \frac{xy^2}{(x+y)^2} + \frac{x^2y}{(x+y)^2}$$

$$= \frac{xy}{x+y}$$

$$= u.$$

பயிற்சி 3.

$$u = \tan^{-1}\frac{x^3+y^3}{x-y}$$ என்றிருப்பின்,

$x\frac{\delta u}{\delta x} = y\frac{\delta u}{\delta y}\sin 2u$ என்று நிறுவுக.

$$\tan u = \frac{x^3+y^3}{x-y}$$

இங்கு xஐப் பொறுத்த பகுப்பு வகைக்கெழு காணின்,

$$\sec^2 u\frac{\delta u}{\delta x} = \frac{(x-y)\,3x^2 - (x^3+y^3)}{(x-y)^2}$$

$$= \frac{2x^3 - 3x^2y - y^3}{(x-y)^2}$$

இதுபோன்றே, $\sec^2 u\frac{\delta u}{\delta y} = \frac{x^3+3xy^2-2y^3}{(x-y)^2}$

ஆகவே, $\sec^2 u \left(x\frac{\delta u}{\delta x} + y\frac{\delta u}{\delta y}\right)$

$$= \frac{x(2x^3-3x^2y-y^3)+y(x^3+3xy^2-2y^3)}{(x-y)^2}$$

$$\frac{2(x^4-y^4)-2(x^3y-xy^3)}{(x-y)^2}$$

$$= 2.\frac{x^3+y^3}{x-y}$$

$$= 2\tan u.$$

$$\therefore x\frac{\delta u}{\delta x}+y\frac{\delta u}{\delta y} = 2\tan u \sec^2 u$$

$$= \sin 2u$$

பயிற்சி 4.

$V = (x^2+y^2+z^2)^{-1/2}$ என்றிருப்பின்,

$\frac{\delta^2 V}{\delta x^2}+\frac{\delta^2 V}{\delta y^2}+\frac{\delta^2 V}{\delta z^2} = 0$ என்று நிறுவுக.

xஐப் பொறுத்த V-ன் பகுப்பு வகைக்கெழு காண வருவது,

$$\frac{\delta V}{\delta x} = -\tfrac{1}{2}(x^2+y^2+z^2)^{-3/2}\,2x$$

$$= -x(x^2+y^2+z^2)^{-3/2}.$$

மீண்டும் xஐப் பொறுத்த வகைக்கெழு காணின்

$$\frac{\delta^2 V}{\delta x^2} = 3/2x\,(x^2+y^2+z^2)^{-5/2}\,2x-(x^2+y^2+z^2)^{-3/2}$$

$$= \frac{3x^2}{(x^2+y^2+z^2)^{5/2}}-\frac{1}{(x^2+y^2+z^2)^{3/2}}$$

$$= \frac{2x^2-y^2-z^2}{(x^2+y^2+z^2)^{5/2}}$$

இவ்வாறே, $\frac{\delta^2 V}{\delta y^2} = \frac{2y^2 - z^2 - x^2}{(x^2 + y^2 + z^2)}{}^{5/2}$

$$\frac{\delta^2 V}{\delta z^2} = \frac{\delta z^2 - x^2 - y^2}{(x^2 + y^2 + z^2)}{}^{5/2}$$

$$\frac{\delta^2 V}{\delta x^2} + \frac{\delta^2 V}{\delta y^2} + \frac{\delta^2 V}{\delta z^2} = 0.$$

பயிற்சி 5.

$u = \log\left(\frac{x^2 + y^2}{xy}\right)$ என்றிருப்பின், $\frac{\delta^2 u}{\delta x \cdot \delta y} = \frac{\delta^2 u}{\delta x \ \delta y}$

என்ற தேற்றத்தை மெய்ம்மைப் படுத்துக.

$$u = \log(x^2 + y^2) - \log(xy)$$

$$\frac{\delta u}{\delta x} = \frac{2x}{x^2 + y^2} - \frac{y}{xy}.$$

$$= \frac{2x}{x^2 + y^2} - \frac{1}{x}.$$

$$\frac{\delta^2 u}{\delta y \cdot \delta x} = \frac{\delta}{\delta y}\left(\frac{2x}{x^2 + y^2} - \frac{1}{x}\right)$$

$$= \frac{-4xy}{(x^2 + y^2)^2}$$

$$\frac{\delta u}{\delta y} = \frac{2y}{x^2 + y^2} - \frac{x}{xy}$$

$$= \frac{2y}{x^2 + y^2} - \frac{1}{y}$$

$$\frac{\delta^2 u}{\delta x \cdot \delta y} = \frac{\delta}{\delta x}\left(\frac{2y}{x^2 + y^2} - \frac{1}{y}\right)$$

$$= -\frac{4xy}{(x^2 + y^2)^2}$$

$$\therefore \frac{\delta^2 u}{\delta y \ \delta x} = \frac{\delta^2 u}{\delta x \cdot \delta y}.$$

பயிற்சிகள் 31.

1. பின்வருவனவற்றிற்கு $\frac{\delta u}{\delta x}$, $\frac{\delta u}{\delta y}$ காண்க.

(1) $u = \tan(ax + by)$ (4) $u = \sin^{-1}\left(\frac{x}{y}\right)$

(2) $u = (3x^2 - 4xy)^2$ (5) $u^2 = \frac{x^2 - y_2}{x^2 + y^2}$

(3) $u = x^2 y^2$ (6) $u \tan^{-1} \frac{x^2 + y^2}{x + y}$

2. பின்வருவனவற்றிற்கு $\frac{\delta V}{\delta x}$, $\frac{\delta V}{\delta y}$, $\frac{\delta V}{\delta z}$ காண்க.

(1) $V^2 = \frac{1}{x^2 + y^2 + z^2}$

(2) $V = ax^2 + 2hxy + by^2 + 2gzx + 2fyz + cz^2$

(3) $V = \tan^{-1}\left(\frac{x + y}{z}\right)$

3. $u = (y - z)(z - x)(x - y)$ என்றிருப்பின்.

$$\frac{\delta u}{\delta x} + \frac{\delta u}{\delta y} + \frac{\delta u}{\delta z} = 0$$ என்று நிறுவுக.

4. $u = \log(x^3 + y^3 + z^3 - 3xy^3)$ என்றிருப்பின்,

$$\frac{\delta u}{\delta x} + \frac{\delta u}{\delta y} + \frac{\delta u}{\delta z} = \frac{3}{x + y + z}$$ என்று நிறுவுக.

5. $u \log(\tan x + \tan y + \tan z)$ என்றிருப்பின்,

$$\sin 2x \frac{\delta u}{\delta x} \times \sin 2y \frac{\delta u}{\delta y} + \sin 2z \frac{\delta u}{\delta z} = 2$$

என்று நிறுவுக.

6. $\frac{z}{e\, x^2 = y^2} = x - y$ எனின், $y\frac{\delta z}{\delta x} + x\frac{\delta z}{\delta y} = x^2 - y^2$

என்று நிறுவுக.

7. $u = \sin\left(\frac{x^2 - y^2}{x + y}\right)$ என்றிருப்பின்,

$$x\frac{\delta u}{\delta x} + y\frac{\delta u}{\delta y} = \frac{x^2 + y}{x + y}\cos\frac{x^2 + y^2}{x + y}$$ என்று நிறுவுக.

8. $u = \tan^{-1}\left(\frac{x + y}{x + y}\right)^{3/2}$ எனின், $x\frac{\delta u}{\delta x} + y\frac{\delta u}{\delta y} = 0$

என்று நிறுவுக.

9. $u = \sin^{-1}\frac{\sqrt{x} - \sqrt{y}}{\sqrt{x} + \sqrt{y}}$ என்றிருப்பின், $\frac{\delta u}{\delta x} = -\frac{y}{x} - \frac{\delta u}{\delta y}$

என்று நிறுவுக.

10. பின்வரும் சார்புகள் மூலம் $\frac{u^2 u}{\delta x\, \delta y} + \frac{\delta^3 u}{\delta y\, \delta x}$ என்ற

தேற்றத்தை மெய்மைப் படுத்துக.

(1) $u = \frac{x^3 - y^3}{x^2 + y^3}$

(2) $u = \tan\frac{y}{x}$.

(3) $u = \log\left\{x\tan^{-1}(x^2+y^2)\right\}$.

11. $u \quad \frac{x^2 + y^2}{x + y}$ எனின்,

$$\left(x^2\frac{\delta^2 u}{\delta x^2} + 2xy\frac{\delta^2 u}{\delta x \cdot \delta y} +\right) y^2\frac{\delta^2 u}{\delta y^2} = 0$$ என்று நிறுவுக.

12. $u = \log(x^2 + y^2 + z^2)$ எனின்.

$$x\frac{\delta^2 u}{\delta y \cdot \delta x} \quad y\frac{\delta^2 u}{\delta z . \delta x} \quad z.\frac{\delta^2 u}{\delta x . \delta y}$$ என்று நிறுவுக.

13. $u = \frac{x^2 y^2}{x+y}$ என்றிருப்பின்,

$$x\frac{\delta^2 u}{\delta^2 x} + y\frac{\delta^2 u}{\delta x . \delta y} = 2\frac{\delta u}{\delta x}$$ என்று நிறுவுக.

14. $z(x+y)=x^2+y^2$ என்றிருப்பின்,

$$\left(\frac{\delta z}{\delta x}-\frac{\delta z}{\delta y}\right)^2=4\left(1-\frac{\delta z}{\delta x}-\frac{\delta z}{\delta y}\right)$$ என்று நிறுவுக.

15. $r^2=(x-a)^2+(y-b)^2+(z-c)^2$ என்றிருப்பின்,

$$\frac{\delta^2 r}{\delta x^2}+\frac{\delta^2 r}{\delta y^2}+\frac{\delta^2 r}{\delta y^2}=\frac{2}{r}$$ என்று காட்டுக.

16. $V=e^{a\theta}\cos(a\log r)$ என்றிருப்பின்,

$$\frac{\delta^2 V}{\delta r^2}+\frac{1}{r}\frac{\delta V}{\delta r}+\frac{1}{r^2}\frac{\delta^2 V}{\delta\theta^2}=0$$ என்று நிறுவுக.

17. $r^2=x^2+y^2$ என்றிருப்பின்,

$$\frac{\delta^2 r}{\delta x^2}+\frac{\delta^2 r}{\delta y^2}=\frac{1}{r}\left\{\left(\frac{\delta r}{\delta x}\right)^2+\left(\frac{\delta r}{\delta y}\right)^2\right\}$$ என்று நிறுவுக.

18. $u=f(y+ax)+\phi(y-ax)$ எனின்,

$$\frac{\delta^2 u}{\delta x^2}=x^2\frac{\delta^2 u}{\delta y^2}$$ என்று நிறுவுக.

19. $u=\sin^{-1}\frac{x}{y}+\tan^{-1}\frac{y}{x}$ எனின்.

$$x\frac{\delta u}{\delta x}+y\frac{\delta u}{\delta y}=0$$ என்று நிறுவுக.

20. $a^2x^2+b^2y^2-c^2z^2=0$ என்றிருக்கும்பொழுது.

$$\frac{\delta^2 z}{\delta x^2}+\frac{\delta^2 z}{\delta y^2}$$ கோவையின் மதிப்பு என்ன ?

21. $V=(1-2xy-y^2)^{-1/2}$ எனின்,

$$x\frac{\delta V}{\delta x}-y\frac{\delta V}{\delta y}=V^3y^2$$ என்று நிறுவுக.

22. $z=x\tan^{-1}\frac{y}{x}+x\,e^{x/y}$ எனின்

$$x^2\frac{\delta^2 z}{\delta x^2}+2xy\frac{\delta^2 z}{\delta x\,\delta y}+y^2\frac{\delta^2 z}{\delta y^2}=0$$ என்று நிறுவுக.

23. $u = e^{xy}$ என்றிருப்பின்,

$$\frac{\delta^2 u}{\delta x^2} + \frac{\delta^2 u}{\delta y^2} = \frac{1}{u}\left[\left(\frac{\delta u}{\delta x}\right)^2 + \left(\frac{\delta u}{\delta y}\right)^2\right]$$ என்று காட்டுக.

24. $u = y^2 z^2 e^{x/2} + z^2 x^2 e^{y/2} + x^2 y^2 e^{z/2}$ எனின்,

$$\frac{\delta^6 u}{\delta x^2 . \delta y^2 . \delta z^2} = e^{x/2} = e^{y/2} + e^{z^2}$$ என்று நிறுவுக.

25. $u = \sin^{-1} \frac{x^3 + y^2}{x + y}$ என்றிருப்பின்,

$$x \frac{\delta u}{\delta x} + y \frac{\delta u}{\delta y} = \tan u$$ என்று காட்டுக.

26. $u = \tan^{-1} \frac{y}{x}$ எனின்,

$$\frac{\delta^3 u}{\delta^2 y . \delta x} = \frac{\delta^3 u}{\delta x . \delta y^2} = \frac{\delta^3 u}{\delta y \cdot \delta x \cdot \delta y}$$ என்று நிறுவுக.

27. $x^x y^y z^z = c$ என்றிருப்பின், $x = y = z$ என்றிருக்கையில்,

$$\frac{\delta^2 z}{\delta x \cdot \delta y} = -(x \log e\, x)^{-1}$$ என்று நிறுவுக.

28. $z = \log r$ என்றும், $r^2 = (x-a) + (y-b)^2$ என்றும் இருப்பின், $\frac{\delta^2 z}{\delta x^2} + \frac{\delta^2 z}{\delta y^2} = 0$ என்று நிறுவுக.

94. கூடிய வகைக்கெழு (Total Differential coefficient)

$u = f(x, y)$ என்று கொள்வோம். இங்கு x, y என்பவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத மாறிகள். x, y-ன் மதிப்புகள் $x + \Delta x$, $y + \Delta y$ என்று நிரலே மாறின் அதற்குத் தக, u-ன் மதிப்பும் மாறும். அதனை $u + \Delta u$ என்று கொண்டால்,

$$\Delta u = f(x \Delta x, y + \Delta y) - f(x, y)$$

இதனோடு $f(x, y + \Delta y)$ ஐக் கூட்டிக் கழிப்பின்,

$$\Delta u = f(x + \Delta x, y + \Delta y) - f(x, y + \Delta y) + f(x, y) + \Delta\ ) - f(x, y)$$

இடை மதிப்புத் தேற்றத்தின்படி,

$$f(x+\Delta x, y+\Delta y)-f(x, y+\Delta y)=f'x(x+\theta_1\Delta x, y+\Delta y)\Delta x$$

$$f(x, y+\Delta y)-f(x,y)=f'y(x, y+\theta^2\Delta y).\Delta y$$

இங்கு θ_1 θ_2 மிகை பின்னங்கள்.

ஆகவே,

$\Delta u=f'x(x+\theta_1\Delta x, y+\Delta y)\Delta x+f'y(x, y+\theta_2\Delta y.)$ Δy x, y மாறிகள் t என்ற மாறியின் சார்பாயின், u, t-ன் ஒரு சார்பு ஆகும்.

ஆகவே, t–ன் கூட்டுத் தொகை Δt ஆயின், x, y, u என்பவற்றின் கூடுந் தொகைகள் முறையே Δx, Δy, Δu ஆகும்.

$$\frac{\Delta u}{\Delta t}+f'x(x+\theta, \Delta x, y+\Delta y)\left(\frac{\Delta x}{\Delta t}+f^2y(x, y+\theta^2\Delta y\frac{\Delta y}{\Delta t}\right)$$

சுன்னத்தை Δt நெருங்குங்கால் Δx, Δy சுன்னத்தையும்,

$\frac{x\Delta}{\Delta t}$, $\frac{\Delta y}{\Delta t}$, $\frac{\Delta u}{\Delta t}$ முறையே, $\frac{dx}{dt}$, $\frac{dy}{dt}$, $\frac{du}{dt}$ என்பவற்றையும் நெருங்கும்.

$$\frac{du}{dt}=f'x(x, y)\frac{dx}{dt}+f'y(x, y)\frac{dy}{dt}.$$

இங்கு $f'x$, $f'y$ முறையே, x, y என்பவற்றைப் பொறுத்த $f(x, y)$-ன் பகுப்பு வகைக்கெழுவாகும்.

ஆகவே,

$$\frac{du}{dt}=\frac{\delta u}{\delta x}\cdot\frac{dx}{dt}+\frac{\delta u}{\delta y}\cdot\frac{dy}{dt}$$

இவ்வண்ணமே, $u=f(x, y, z)$-ல் x, y, z, t-ன் சார்பாயின்

$$\frac{du}{dt}=\frac{\delta u}{\delta x}\frac{dx}{dt}+\frac{\delta u}{\delta y}\frac{dy}{dt}+\frac{\delta u}{\delta z}\frac{dz}{dt}$$

இவ்வாறே, $u=f(x_1, x_2, -\ldots x_n)$-ல் $x_1, x_2, \ldots\ldots x_n$ t-ன் சார்பாயின்,

$$\frac{du}{dt}=\frac{\delta u}{\delta x_1}\frac{dx_1}{dt}+\frac{\delta u}{\delta x}\frac{dx}{dt}+\ldots\frac{\delta u}{\delta x_n}\frac{dx_n}{dt}.$$

95. குறிப்பிடத்தகும் ஒரு வகை.

t-ன் சார்பாக x, y என்றும், $u = f(x, y)$ என்றும் இருப்பின், $\frac{du}{dt} = \frac{\delta u}{\delta x} \cdot \frac{dx}{dt} + \frac{\delta u}{\delta y} \frac{dy}{dt}$

இங்கு t ஐ x ஆகக் கொண்டால், x, y என்பவற்றின் சார்பு u, x-ன் சார்பு y.

$$\therefore \frac{du}{dx} \frac{\delta u}{\delta x} \frac{dx}{dx} \cdot + \frac{\delta u}{\delta y} \cdot \frac{dy}{dx}$$

இங்கு $\frac{du}{dx}$, $\frac{\delta u}{\delta x}$ வேறுபட்டவை.

இது போலவே, $\frac{du}{dx} = \frac{\delta u}{\delta y} + \frac{\delta u}{\delta x} \cdot \frac{dx}{dy}$,

எடுத்துக்காட்டாக, $u = x^2 + y^2$ என்ற சார்பைப் பார்ப்போம். இங்கு x-ன் ஒரு சார்பு y என்று கொள்வோம்.

$$\frac{\delta u}{\delta x} = 2x; \quad \frac{\delta u}{\delta y} = 2y$$

$$\therefore \frac{du}{dx} = \frac{\delta u}{\delta x} + \frac{\delta u}{\delta y} \cdot \frac{dy}{dx}$$

$$= 2x + 2y \frac{dy}{dx}.$$

$\frac{du}{dx}$ -ன் மதிப்பு x, y-ன் சார்புத் தொடரைப் பொறுத்தது.

$$x + y = 1 \text{ என்றிருப்பின்}, \ 1 + \frac{dy}{dx} = 0$$

$$\therefore \frac{du}{dx} = 2x - 2y.$$

$u = x^2 + y^2$, $x + y = 1$ இவற்றுள் yஐ விலக்கின் x-ன் சார்பாகவே u வரும். பின்னர் $\frac{du}{dx}$ காணலாம். ஆனால், இச் சமன்பாடுகளிலிருந்து yஐ விலக்குவது எளிதன்று. ஆதலின், இம் முறையை எப்பொழுதும் பயன்படுத்த முடியாது.

86. உட்படு சார்புகள் (Implicit functions)

உட்படு சார்புகளிலிருந்து $\frac{dy}{dx}$ காணும் முறையை முன்பே கண்டோம். இப் பகுதிகளில் அதனைக் காணக்கூடிய வகைக் கெழுவைப் பயன்படுத்தும் முறையைக் காண்போம்.

$f(x, y) = c$ என்று கொள்வோம்:
கூடிய வகைக்கெழுவை இருபுறத்தும் எடுப்பின்,

$$\frac{dc}{dx} = \frac{\delta f}{\delta x} + \frac{\delta f}{\delta y}\frac{dy}{dx}$$

c. நிலையெண்ணாதலின் $\frac{dc}{dx} = 0$

$$\therefore \quad \frac{\delta f}{\delta x} + \frac{\delta f}{\delta y} + \frac{dy}{dx} = 0$$

$$\therefore \quad \frac{dy}{dx} = -\frac{\frac{\delta f}{\delta x}}{\frac{\delta f}{\delta y}}$$

பயிற்சி 6.

$u = x^2 + y^2 + z^2, \; x = et, \; y = et, \sin t, \; z = et \cos t$

என்றிருப்பின், $\frac{du}{dt}$ காண்க.

$$\frac{du}{dt} = \frac{\delta u}{\delta x}\frac{dx}{dt} + \frac{\delta u}{\delta y}\frac{dy}{dt} + \frac{\delta u}{\delta z}\frac{dz}{dt}$$

$$= 2x\, et + 2y\,(e \sin t + et \cos t) + 2z\,(et \cos t - et \sin t)$$

$$= 2et\,(x + y \sin t + y \cos t + z \cos t - z \sin t)$$

$$= 2\,et\,(et + e^2 \sin^2 t + et \sin t \cos t + et \cos^2 t - et \sin t \cos^2 t$$

$$= 2\,et.\ 2e$$

$$= 4\,e^2 t.$$

பயிற்சி 7.

$u = x^2 + y^2$, $y = \dfrac{1-x}{x}$ என்றிருப்பின், $\dfrac{du}{dx}$-ன் மதிப்பு என்ன ?

$$\frac{du}{dx} = \frac{\delta u}{\delta x} + \frac{\delta u}{\delta y} \cdot \frac{dy}{dx}$$

$$= 2x + 2y \cdot \frac{d}{dx}\left(\frac{1-x}{x}\right)$$

$$= 2x + 2y\left(-\frac{1}{x^2}\right)$$

$$= 2x - \frac{2}{x^2} \quad \frac{(1-x)}{x}$$

$$= \frac{2(x^4 + x - 1)}{x^3}$$

பயிற்சி 8.

$x^3 + y^3 = 3axy$ என்றிருப்பின், $\dfrac{dy}{dx}$ காண்க.

$x^3 + y^3 - 3axy = 0$ அஃதாவது $f(x, y) = 0$

$$\frac{\delta f}{\delta x} = 3x^2 - 3ay; \quad \frac{\delta f}{\delta y} = 3y^2 - 3ax$$

$$\therefore \frac{dy}{dx} = -\frac{3x^2 - 3ay}{3y^2 - 3ax} = \frac{ay - x^2}{y^2 - ax}$$

97. சமபடித்தான சார்புகள் (Homogeneous functions)

$f(x, y) = a_0 x^n + a_1 x^{n-1} y + a x^{n-2} y^2 + \ldots\ldots\ldots + a_{n-1} x y^{n-1} + a_n y^n$ இக் கோவையில் ஒவ்வோர் உறுப்பின் படியும் n. இக் கோவை n படி சமபடித்தான சார்பு (Homogeneous function) எனப்படும். இதனைப் பின்வருமாறு எழுதலாம் :

$$f(x, y) = x^n \left\{ a_0 + a_1 \frac{y}{x} + a_2\left(\frac{y}{x}\right)^2 + \ldots\ldots + a_n\left(\frac{y}{x}\right)^n \right\}$$

$= x^n \, x\left(\dfrac{y}{x}\right)$-ன் ஒரு சார்பு.

$$= x^n F\left(\frac{y}{x}\right)$$

இது போன்றே, x_1, $_2$ .... x_n மாறிகள் அடங்கிய n படி சமபடித்தான $f(x_1\, x_2 \ldots\ldots\ldots\ldots\, x_n)$ என்ற சார்பை,

$$x_r{}^n F\left(\frac{x_1}{x_r}, \ \frac{x_2}{x_r} \ldots\ldots\ldots\ldots \frac{x_n}{x_r}\right)$$ என்று எழுதலாம்.

98. சமபடித்தான சார்புகள் பற்றிய ஆயலர் தேற்றம் (Euler's Theorem on Homogeneous functions)

$f(x, y)$, r படி சமபடித்தான x, y-ன் சார்பாயின்,

$$\frac{\delta f}{\delta x} + \frac{\delta f}{\delta y} = f(x, y).$$

$$f(x, y) = a_0\, x^n + a_1\, x^{-1}\, y + x_2\, x^{n-2}\, y^2 + \ldots\ldots\ldots\ldots\ldots\ldots + a_n\, y^n$$
என்று கொள்வோம்.

இஃது n படி சமபடித்தான சார்பாதலின்,

$$f(x, y) = x^n\, F\left(\frac{y}{x}\right)$$

$$\therefore \frac{\delta f}{\delta y} = \frac{\delta}{\delta x}\left\{ x^n\, F\left(\frac{y}{x}\right)\right\} = n\, x^{n-1}\, F\left(\frac{y}{x}\right) - x^{n-2}\, y.\ F'\left(\frac{y}{x}\right)$$

$$\frac{\delta f}{\delta y} = \frac{\delta}{\delta y}\left\{ x^n\, F\left(\frac{y}{x}\right)\right\} = x^n\, F'\left(\frac{y}{x}\right).\ \frac{1}{x} = x^{n-1}\, F'\left(\frac{y}{x}\right),$$

$$\therefore \frac{\delta f}{\delta x} + y\, \frac{\delta \delta}{\delta y} = n.\ x^n\, F\left(\frac{y}{x}\right) - x^{n-1}\, y\, F'\left(\frac{y}{x}\right)$$

$$+ x^{n-1} y.\ F\left(\frac{y}{x}\right) = n.\ x^n\, F\left(\frac{y}{x}\right)$$

$$= n\, f(x, y) = nf.$$

பொதுவாக, $f\ (x_1, x_2, \ldots \ldots\ldots x_n)$ n படியே சமபடித்தான சார்பாயின், $x_1\, \frac{\delta f}{\delta x_1} + x_2\, \frac{\delta f}{\delta x} \ldots\ldots\ldots + x_n\, \frac{\delta f}{\delta x_n}$ nf என்று முன்னர்ப் போலவே நிறுவலாம்.

பயிற்சி 9.

$u = x^3 + y^3 + 3xyz$ என்றிருப்பின், ஆயலர் தேற்றத்தை மெய்ம்மைப்படுத்துக.

$$\frac{\delta u}{\delta x} = 3x^2 + 3yz$$

$$\frac{\delta u}{\delta y} = 3y^2 + 3xz$$

$$\frac{\delta u}{\delta z} = 3xy$$

$$\therefore x\frac{\delta u}{\delta x} + \frac{\delta u}{\delta y} + z\frac{\delta u}{\delta z} = 3x^3 + 3y^3 + 9xyz$$

$$= 3(x^3 + y^3 + 3xyz)$$

$$= 3u.$$

பயிற்சிகள் 32.

1. பின்வரும் பயிற்சிகளில் $\frac{du}{dt}$ காண்க.

(1) $u = \log(x + y + z), x = \cos t, y = \sin^2 t, z = \cos 2t$

(2) $u = xyz, x = e^{-t}, \sin t, z = \sin t, y = e^{-t}$

(3) $u = x^3y^4z^2. x = t^2, y = t^3, z = t^4$

2. பின்வரும் பயிற்சிகளில் $\frac{du}{dx}$ காண்க.

(1) $u = x^2 + y^2 + a^2$ $\quad x^3 + y^3 = a^3$

(2) $u = \tan^{-1}\frac{y}{x}$ $\quad y \tan^2 x$

(3) $u = x^3 y^2$ $\quad x^2 - xy + y^2 = a^2$

(4) $u = \sin(x^2 + y^2)$ $\quad \frac{x^2}{a^2} + \frac{y^2}{y^2} = 1$

(5) $u = x \log(xy)$ $\quad x^3 + y^3 - 3xy = 0$

3. x, y பின்வருவன போல் தொடர்பு உடைய நிலையில் $\frac{dy}{dx}$ காண்க.

(1) $\frac{x^2}{y^2} + \frac{y^2}{b^2} = 1$

(2) $y^2 = 4ax$

(3) $xy = c^2$

(4) $ax^2 + 2hxy + by^2 = 1$

(5) $ax^2 + 2hxy + by^2 + 2gx + 2fy + c = 0.$

(6) $(x - a)^2 + (y - b)^2 = R^2$

4. பின்வரும் சார்புகளைக் கொண்டு ஆயலர் தேற்றத்தை மெய்ம்மைப் படுத்துக:

(1) $u = \frac{x^3 (x^3 - y^3)^3}{(x^2 + y^2)^3}$

(2) $u = \sin \left(\frac{x - y}{x + y} \right)^{\frac{1}{2}}$

99. பிழைகளும் அண்ணளவுகளும் (Erros and approximations): தக்க கருவிகளால் எவ்வளவு நன் முறையில் அளந்த போதும் நடைமுறையில் சிற்சில பிழைகள் அவ்வளவுகளில் வரவே செய்யும். ஆகவே, பல்வேறு அளவைகளில் மொத்தப் பிழை எவ்வளவு வரலாம் என்று சிறப்பாகக் கருதவேண்டும்.

x ஐ அளக்கும்பொழுது வரும் சிறு பிழையை δx என்று குறிப்பிடுவது வழக்கம். δx தனிப்பிழை (absolute error) என்றும், $\frac{\delta x}{x}$ ஒப்புப் பிழை (relative error) என்றும், $\frac{\delta x}{x} \times 100$ நூற்று வீதப்பிழை (percentage error) என்றும் குறிப்பிடப்படும். எடுத்துக் காட்டாக 10″ அளக்கும்பொழுது ·2″ பிழை ஏற்படின், தனிப் பிழை ·2″, ஒப்புப் பிழை ·02, நூற்று வீதப்பிழை 2.

100. அண்ணளவான கணக்கீடுகள் (Approximate calculations): $y = f(x)$ என்று கொள்வோம். y-ன் மதிப்பு x-ன் அளவிலிருந்து கணக்கிடப்படும். x-ன் அளவிலுள்ள பிழை, அதாவது உண்மை

அளவுக்கும், அளந்த அளவுக்கும் உள்ள வேற்றுமை δx எனின், உண்மை அளவு $x + \delta x$. அதற்குத்தக y-ல் ஏற்படும் பிழை δy என்று கொள்ளின்,

$$\delta y = f(x + \delta x) - f(x)$$
$$= f'(x + \theta\, \delta x)\, \delta x. \quad \text{(இடைமதிப்புத் தேற்றம்).}$$

இங்கு $0 < \theta < 1$ ஆகையால், $\theta\, \delta x$ மிகச் சிறிய தொகை. இதனைக் கழிக்க.

$\delta y = f'(x)\, \delta x$ அண்ணளவாக

இதனைப் பின்வருமாறும் நிறுவலாம்.

x-ன் கூடுந்தொகை δx ஆயின், y-ன் கூடுந்தொகை δy என்று கொள்வோம்.

$$\therefore \operatorname*{Lt}_{\delta x \to 0} \frac{\delta y}{\delta x} = f'(x)$$

ஆகவே, $\dfrac{\delta y}{\delta x} = f'(x) + t.$ இங்கு t மிகவும் சிறிய தொகை.

$$\therefore \quad \delta y = f'(x)\, \delta x + t.\, \delta x.$$

சுன்னத்தை δx நெருங்கும் நிலையில் t. δx ஐ முதல் உறுப போடு ஒப்பிடின், அதுவும் சிறிதாதலின் அதனைப் பொருட் படுத்த வேண்டா. அப்பொழுது அண்ணளவாக

$$\delta y = f''(x)\, \delta x.$$

பயிற்சி 10.

l நீண்ட ஓர் ஊசலி (pendulum). ஓர் ஊசல் ஆட்ட ஆடுங் காலம் $T = 2\pi \sqrt{\dfrac{l}{g}}$. இங்கு g புவிக்கவர்ச்சியாகும். l-ல் ஏற்படும் பிழை 2 நூற்று வீதம் எனின், T-ல் ஏற்படும் பிழை என்ன ?

$$T = 2\pi \sqrt{\frac{l}{g}}$$

$$\therefore \quad \delta T = \frac{2\pi}{\sqrt{g}} \tfrac{1}{2} l^{-\frac{1}{2}}\, \delta l$$

l-ல் உள்ள பிழை $= 2$ நூற்று வீதம்

$$\therefore \frac{\delta l}{l} \times 100 = 2$$

$$\therefore \delta T = \frac{2\pi}{\sqrt{g}} \quad \frac{1}{l^{\frac{1}{2}}} \times \frac{2l}{100}$$

$$= 2\pi \sqrt{\frac{1}{g}} \quad \frac{1}{100}$$


$$= \frac{T}{100}$$

$$\therefore \frac{\delta T}{T} \times 100 = 1$$

T-ல் ஏற்படும் நூற்றுவீதப் பிழை 1.

பயிற்சி 11.

$ABCD$ என்ற நீள் சதுர கோணளவில் (rectangular protractor) $AB = 6''$. $BC = 2''$. AB-ன் மையம் O. CD விளிம்பில் P குறி காட்டும் கோணம் BOP. θ பாகைகள் (degrees) அளக்கையில் விளிம்பில் சரியான இடத்திலிருந்து $\frac{1}{100}$ அங்குலம் தள்ளிக் குறி இருப்பின், கோணத்தில் ஏற்படும் பிழை $\frac{9 \sin^2 \theta}{10\pi}$ பாகைகள் என்று நிறுவுக.



படம் 19

PC ஐ x என்று கொள்வோம். P-லிருந்து AB-க்கு PQ குத்துக்கோடு வரைக.

அப்பொழுது $OQ = 3 - x$

$$\therefore \tan \theta = \frac{2}{3 - x}$$

ஆகவே, $$\sec^2 \theta \, \delta \theta = \frac{2}{(3 - x)^2} \delta x$$

$$= \frac{2}{4 \cot^2 \theta} \delta x$$

$$\therefore \delta \theta = \frac{\sin^2 \theta}{2} \delta x$$

$$b\,x = \frac{1}{100}\,\delta\,\theta \text{ ஆரையனில் அளக்கப்படுதலின்,}$$

$$\theta = \frac{\sin^2\theta}{2} + \frac{1}{100} \text{ ஆரையன்}$$

$$= \frac{\sin^2\theta}{2} \times \frac{1}{100} \times \frac{180}{\pi} \text{ பாகைகள்}$$

$$= \frac{9\sin^2\theta}{10\,\pi} \text{ பாகைகள்}$$

பயிற்சி 12.

முக்கோண ABC-ல் கோணம் Cஐ அளக்க வந்த அளவு 47°. முக்கோணத்தின் பரப்பினை $\frac{1}{2}\,ab\sin C$ என்ற வாய்ப்பாட்டிலிருந்து கணக்கிடின், C-ன் அளவில் வந்த $10'$ பிழைக்குத் தக, பரப்பில் ஏற்படும் நூற்றுவீதப் பிழை என்ன ?

முக்கோணத்தின் பரப்பு Δ என்று கொள்வோம்.

$$\Delta = \tfrac{1}{2}\,ab\sin C$$

இரு புறங்களிலும் மடக்கை எடுப்பின்,

$$\log\Delta = \log\tfrac{1}{2} + \log a + \log b + \log\sin G.$$

C ஒன்றிலேதான் பிழை ஏற்படுகிறது.

$$\frac{\delta\Delta}{\Delta} = \cot C\,\delta c$$

$$\Delta\text{-ல் ஏற்படும் நூற்று வீதப் பிழை} = \frac{\delta\Delta}{\Delta} \times 100$$

$$= \cot c.\ \delta\,c.\ 100$$

$$\delta\,c = 10' = \tfrac{1}{6} \times \frac{\pi}{180} \text{ ஆரையன்}$$

$$\Delta\text{-ல் ஏற்படும் நூற்று வீதப்பிழை} = \cot 47^\circ \times \frac{\pi}{6\times 180} \times 100$$

$$= \frac{5\pi}{54}\cot 47^\circ$$

101. பலமாறிகள் அடங்கிய வகையின் அண்ணளவு

$u = f(x, y)$ என்று கொள்வோம்.

அப்பொழுது, $\delta\,u = f x + \delta\,x, y + \delta\,y) - f(x, y)$

$$= f(x + \delta\,x, y + \delta\,y) - f(x, y + \delta\,y)$$

$$+ f(x, y + \delta\,y) - f(x, y)$$

$$= f\,a\,(x + \theta_1\,\delta\,x, y + \delta\,y)\,\delta\,x + f'\,(x, y + \theta_2\,\delta\,y)\,\delta\,y$$

இங்கு $0 < \theta_1 < 1, 0 < \theta < 1$

$\theta_1 \delta x, \theta \delta y$ மிகச் சிறியன வாதலின்

$\delta u = f'_x(x, y)\, \delta x + f'y\,(x, y)\, \delta x$ என்று கொள்ளலாம்.

ஆகவே, $\delta u = \frac{\delta f}{\delta x} \delta x + \frac{\delta f}{\delta y} \delta y$ அண்ணளவாக இது போன்றே $x_1 x$ .... x_n என்ற மாறிகளின் சார்பாக u இருப்பின், அண்ணளவாக

$$\delta u = \frac{\delta u}{\delta x} \delta x_1 + \frac{\delta u}{\delta x} \delta x_2 + \ldots\ldots\ldots + \frac{\delta u}{\delta x_n} \delta x_n$$

பயிற்சி 13.

ஒரு கோணத்தின் தன்மைநிறை W, நீரகத்து நிறை W_2 இவற்றால் அதன் ஆரை r-ன் கணக்கிடப்படின் r-ன் ஒப்புப்பிழை $\frac{\delta r}{r} = \frac{\delta w_1 - \delta w^2}{3\,(w_1 - w_2)}$ என்று நிறுவுக.

$w_1 - w_2 =$ விலகிய நீரின் நிறை.

$=$ கோள அளவு நீர் நிறை.

$= \frac{4}{3} \pi r^3 k.$

இங்கு, k ஒரு கன அளவு அலகின் (unit) நீர் நிறை.

$$\therefore \log \left(\frac{4 \pi k}{3}\right) + 3 \log r = \log (w_1 - w_2)$$

$$\therefore 3 \frac{\delta r}{r} = \frac{\delta w_1 - \delta w_2}{3\, w_1 - w_2}$$

ஆகவே, ஒப்புப்பிழை $\frac{\delta r}{r} = \frac{\delta w_1 - \delta w_2}{3\,(w_1 - w_2)}$

பயிற்சி 14.

ஒரு கம்பியின் விறைப்பு (rigidity) $N = \frac{8 \pi l I}{t^2 + r^4}$ என்ற வாய்பாட்டால் பெறப்படும். l, 2 நூற்று வீதம் குறைந்தும், r, 2 நூற்று வீதமும் t 1·5 நூற்று வீதமும் கூடியும் இருப்பின், அண்ணளவாக 13 நூற்று வீதம் குறையும் என்று காட்டுக.

2 நூற்று வீதம் l குறைகிறது $\qquad \therefore \frac{\delta l}{l} \times 100 = -2$

2 நூற்று வீதம் r கூடுகிறது $\qquad \therefore \frac{\delta r}{r} \times 100 = +2$

1·5 நூற்று வீதம் t கூடுகிறது $\qquad \therefore \frac{\delta t}{t} \times 100 = -1{\cdot}5$

$$N = \frac{8 \pi I l}{t^2 + r^4}$$

இருபுறத்தும் மடக்கை எடுப்பின்,

$$\log N = \log (8 \pi 1) + \log l - 2 \log t - 4 \log r$$

$$\therefore \frac{\delta N}{N} = \frac{\delta l}{l} - 2\frac{\delta t}{i} - 2\frac{\delta r}{r}$$

$$\therefore \frac{\delta N}{N} \times 100 = \frac{\delta l}{l} \times 100 - 2\frac{\delta t}{t} \times 100 - 2\frac{\delta r}{r} \times 100$$

$$= -2 - 2 \times 1{\cdot}5 - 4 \times 2$$

$$= -13$$

ஆகவே, N-ன் குறைவு 13%.

பயிற்சி 15.

முக்கோண ABC-ன் பரப்பு Δ, அதன் பக்கம் a, கோணங்கள் B, C, என்றவற்றால் கணக்கிடப்படுகிறது. B, C-ன் மதிப்பு சிறிது பிழைப்படுமெனின் முக்கோணத்தின் பரப்பில் ஏற்படும் பிழை $\frac{1}{2}(b^2 \delta C + c^2 \delta B)$ என்று நிறுவுக.

முக்கோணத்தின் பக்கங்கள் a, b, c என்றும், கோணங்கள் A, B, C என்றும் இருப்பின்,

$$\frac{a}{\sin A} = \frac{b}{\sin B} = \frac{c}{\sin C}$$

$$\Delta = \frac{1}{2} ab \sin C$$

$$\therefore \Delta = \frac{1}{2} a^2 \frac{\sin B \cdot \sin C}{\sin A}.$$

இருபுறத்தும் மடக்கை எடுப்பின்,

$$\log \Delta = \log (\tfrac{1}{2} a^2) + \log (\sin B) + \log (\sin C) - \log (\sin A)$$

$$\therefore \frac{\delta \Delta}{\Delta} = \frac{\cos B}{\sin B} \delta B + \frac{\cos C}{\sin C} . \delta C - \frac{\cos A}{\sin A} . \delta A$$

$A + B + C = 180^\circ$ ஆதலின், $\delta A + \delta B = \delta C = 0.$

ஆகவே, $\dfrac{\delta \Delta}{\Delta} - \dfrac{\cos B}{\sin B} \delta B + \dfrac{\cos C}{\sin C} \delta c + \dfrac{\cos A}{\sin A} (\delta B + \delta C)$

$$= \left(\frac{\cos B}{\sin B} + \frac{\cos A}{\sin A}\right) \delta B + \left(\frac{\cos C}{\sin C} + \frac{\cos A}{\sin A}\right) \delta C$$

$$= \left(\frac{\sin (A + B)}{\sin A. \sin B}\right) \delta B + \frac{\sin (A + C)}{\sin A. \sin C} \delta C.$$

$$= \frac{\sin C}{\sin A \sin B} \delta B + \frac{\sin B}{\sin A. \sin C} \delta C$$

$\Delta - \frac{1}{2} b^2 \dfrac{\sin A. \sin C}{\sin B} = \frac{1}{2} c^2 \dfrac{\sin A. \sin B}{\sin C}$ என்பதால்,

$$\frac{\delta \Delta}{\Delta} = \frac{1}{2} c^2 \frac{\delta B}{\Delta} + \frac{1}{2} b^2 \frac{\delta C}{\Delta}$$

$$\therefore \delta \Delta = \tfrac{1}{2} (c^2 \delta B + b^2 \delta C).$$

பயிற்சி 16.

முக்கோணத்தின் பரபரப்பான Δ ஐ a, b என்ற பக்கங்களின் சார்பாக எழுதுக. அதனால் $\delta \Delta = R (\cos A. \delta a + \cos B \cdot \delta b + \cos C \delta c)$ என்று நிறுவுக.

$$\Delta = \sqrt{s(s - a) (s - b) (s - c)}$$

$$\therefore \log \Delta = \tfrac{1}{2} \log s + \tfrac{1}{2} \log (s - a) + \tfrac{1}{2} \log (s - b) + \tfrac{1}{2} \log (s - c)$$

$$= \tfrac{1}{2} \log \frac{a + b + c}{2} + \tfrac{1}{2} \log \frac{b + c - a}{2} +$$

$$\tfrac{1}{2} \log \frac{c + a - b}{2} + \tfrac{1}{2} \log \frac{a + b - c}{2}$$

$$= \tfrac{1}{2} \log (a + b + c) + \tfrac{1}{2} \log (b + c - a) +$$
$$\log (c + a - b) + \tfrac{1}{2} \log (a + b - c) - 2 \log 2$$

$$\therefore \quad \frac{\delta \Delta}{\Delta} = \Sigma \tfrac{1}{2} \left(\frac{1}{a+b+c} - \frac{1}{b+c-a} + \frac{1}{c+a-b} + \frac{1}{a+b-c} \right) \delta a$$

$$= \Sigma \tfrac{1}{4} \left(\frac{1}{s} - \frac{1}{s-a} + \frac{1}{s-b} + \frac{1}{s-c} \right) \delta a$$

$$= \Sigma \tfrac{1}{4} \left\{ \frac{s-a-s}{s(s-a)} + \frac{s-c+s-b}{(s-b)(s-c)} \right\} \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \left\{ -\frac{a}{s(s-a)} + \frac{a}{(s-b)(s-c)} \right\} \delta a.$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{s(s-a) - (s-b)(s-c)}{s(s-a)(s-b)(s-c)} . \; a \, \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{s(b+c-a) - bc}{\Delta^2} a \, \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{(a+b+c)(b+c-a) - 2bc}{2\Delta^2} a \, \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{b^2 + c^2 - a^2}{2\Delta^2} a \, \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{2\,bc \cos A}{2\Delta^2} a \, \delta a$$

$$= \tfrac{1}{4} \Sigma \frac{abc}{\Delta^2} \Sigma \cos A . \; \delta a.$$

$$\therefore \quad \delta \Delta = \frac{abc}{4\Delta} (\cos A \, \delta a + \cos B \, \delta b + \cos C . \, \delta c)$$

$$= R (\cos A \, \delta a + \cos B \, \delta b + \cos C . \, \delta c)$$

பயிற்சிகள் 33.

1. ஒரு வாயுவின் அமுக்கம் P, பருவம் V, இவற்றின் தொடர்பு $PV^{1.4}$ = நிலையெண். பருமம் $\frac{1}{2}$ நூற்றுவீதம் குறைந்தால் P எவ்வளவு நூற்றுவீதம் கூடும்?

2. மின்னோட்டத்தின் அளவு மின்னோட்ட மானி (tangent galvanometer) யால் அளக்கும் பொழுது ஒதுக்கக் கோணத்தின் (angle of deflection) இருக்கைக்குத் (tangent) தக இருக்கும்.

45° உள்ள ஒதுக்கக் கோணத்தை அளக்கையில் ஏற்பட்ட பிழை ஒரு நூற்று வீதம் எனின், பின்னேட்ட அளவில் வரும் பிழை அண்ணளவாக $\frac{\pi}{2}$ என்று நிறுவுக,

3. ஒரு கோபுரத்தில் உயரம் அதன் அடிப்பாகத்திலிருந்து a அடி தள்ளிய இடத்து ஏற்றக் கோணம் θ-விலிருந்து கணக்கிடப்படும். ஏற்றக் கோண அளவில் வரும் பிழை $\delta\theta$ எனின் உயரத்தில் வரும் பிழை $\delta h = a \sec^2 \theta \, \delta \theta$ என்று நிறுவுக.

$a = 100$ அடி, $\theta = 30°$ கோணத்தில் ஏற்பட்ட பிழை 1 கலை எனின் $\delta h = \cdot 47$ அங்குலம் என்று நிறுவுக.

4. ஒரு வாயுவின் P அமுக்கமும், V பருமமும் $PV =$ நிலையெண் என்ற தொடரால் இணைக்கப்படும். 1000 கன அங்குல ஒரு சதுர அடிக்கு 20 ராத்தல் பட அமுக்குவதால் 999 க. அ. ஆயின், அமுக்கமும் அண்ணளவாக எவ்வளவு கூடும்?

5. முக்கோணம் ABC-ல் அளக்கப்பட்ட A 63°. அதன் பரப்பு $\frac{1}{2} bc \sin A$ என்ற வாய்பாட்டால் கணக்கிடப்படும். A-ன் அளவில் 15 கலை (minutes) பிழை எனின், பரப்பில் வரும் நூற்று வீதப் பிழை என்ன?

6. அதன் கோணங்கள் A, C, பக்கம் a-என்றிவற்றுல் முக்கோணம் ABC-ன் பரப்பு கணக்கிடப்படும். Aஐ அளக்கையில் வந்த பிழை δA எனின், பரப்பில் வரும் நூற்று வீதப் பிழை $\frac{100 \sin C. \delta A}{\sin A. \sin (A + C)}$ என்று நிறுவுக.

7. ஒரு நீள் வட்டத்தின் பாதி அச்சுகளான a, b-ல் பிழை ஏற்படுவதன் காரணமாக அதன் பரப்பு S-ன் ஏற்படும் பிழையை $\frac{\delta S}{S} = \frac{\delta a}{a} + \frac{\delta b}{b}$ என்று சமன்பாட்டால் அறியலாம் என்று நிறுவுக.

8. ஒரு பொருளின் இயல்பு நிறை W_1, நீரகத்து நிறை W என்றிவற்றுல், அதன் செறிவு (density)(s) கணக்கிடப்படும். இந் நிறைகளில் δW, δW என்ற சிறு பிழைகள் வருமாயின், $\frac{\delta s}{s} = - \frac{W}{W_1 - W} \frac{\delta W_1}{W_1} = \frac{\delta W}{W - W}$ என்று நிறுவுக.

9. 32·4″ அடிப்பாகமும், 78, 82° அடிக்கோணங்களும் உடைய ஒரு முக்கோணத்தில் அடிப்பாகத்தில் வரும் பிழை 0·1 அங்குலத்திற்கு உடபட்டிருப்பின் பரப்பு அளவில் ஏற்படும் நூற்றுவீதப் பிழையின் எல்லை என்ன ?

10. ஓர் அடியின் (mirror) குவியத் தொலையை (focal length) $\frac{1}{v}-\frac{1}{u}=\frac{2}{f}$ என்ற வாய்ப்பாட்டால் அறியலாம். u, v என்பவற்றைக் காண்கையில் ஒவ்வொன்றிலும் பிழை K ஏற்படின் f-ல் ஏற்படும் ஒப்புப் பிழை $\frac{\delta f}{f}=K\left(\frac{1}{v}+\frac{1}{u}\right)$ என்று நிறுவுக.

11. ஒரு மின்னோட்டத்தின் பிணர்வு (resistance $C=\frac{E}{R}$ என்ற வாய்பாட்டால் கணக்கிடப்படும். C, E என்பவற்றின் அளவீடுகள் முறையே 18 மின்னோட்டங்கள் (amperes), 110 மின்னேகங்கள் (volts) ஆகும். அவற்றின் அளவில் வந்த பிழைகள் முறையே $\frac{1}{10}$ மின்னோட்டகம், $\frac{1}{20}$ மின்னேகம் ஆயின், R-ல் ஏற்படும் பிழை என்ன ? நூற்று வீதப் பிழை எவ்வளவு வரை வரும் ?

12. l நீளமும் d விட்டமும் இரு இரு முனைத்தாங்களும் உடைய ஓர் இரும்புக் கம்பியின் நடுவில் W நிறை சுமத்தின், $\frac{W l^3}{d^3}$-க்குத்தக வளையும் 3 நூற்றுவீத நிறையையும், $1\frac{1}{2}$ நூற்று வீத நீளத்தையும், 1 நூற்று வீத விட்டத்தையும் கூட்டின் வளைவு எவ்வளவு நூற்று வீதம் கூடும் ?

13. $a°$ சாய்வாக v வேகத்தோடு எறிந்த ஒரு கல் போகும் தொலை R, $R^2=\frac{v^2\sin 2a}{G}$ என்ற வாய்பாட்டால் கணக்கிடப் படும். சாய்வு, வேகம் என்றிவற்றின் பிழைகள் முறையே 1, $\frac{1}{2}$ நூற்று விதம் ஆயின் R-ல் வரும் நூற்று வீதப் பிழை என்ன ?

14. முக்கோண ABCஐச் சிறிது மாற்றி ஒரே வட்டத்தில் வரைந்திருப்பின், $\frac{\delta a}{\cos A}+\frac{\delta b}{\cos B}+\frac{\delta c}{\cos C}=0$ என்று நிறுவுக.

15. முக்கோணத்தின் பரப்பை பக்கம் a கோணங்கள் B, C என்றிவற்றால் கணக்கிடுங்காலே, அவ்வளவுகளில் வரும் சிறுபிழை காரணமாகப் பரப்பில் ஏற்படும் ஒப்புப் பிழை $\frac{\delta \Delta}{\Delta} = 2\frac{\delta a}{a} + \frac{c}{a}\frac{\delta B}{\sin B} + \frac{b}{a}\frac{\delta c}{\sin C}$ என்று நிறுவுக.

16. முக்கோண ABC-ன் செங்கோடு AD, a, B, C யால், கணக்கிடப்படும். கோணங்களில் வரும் பிழைகள் δB, δC எனின், AD-ல் ஏற்படும் பிழை $\frac{\sin C}{\sin A \sin B}\,\delta B + \frac{\sin B}{\sin A \sin C}\,\delta c$ என்று நிறுவுக.

17. முக்கோணத்தின் பரப்பு அதன் பக்கங்களால் கணிக்கப்படும். பக்கம் a, a அளவு குறைக்கவும், பக்கம் b அவ்வளவு கூட்டவும் செய்யின் $\frac{\delta \Delta}{\Delta} = \frac{2(a-b)a}{c^2 - (a-b)^2}$ என்று நிறுவுக.

18. 15 அடி உயரமும், 25 அடி சாய்வுயரமும் கொண்ட ஒரு கூம்பினை அளந்தகாலே ஏற்படும் பிழைகள் ஒரு சதமானமாயின், கூம்பின் கன அளவில் வரும் பிழை எவ்வளவு?

19. ஒரு கூம்பின் அடிப்பாகமும் அடங்கிய பரப்பு A, அதன் உயரம் h, உச்சிக் கோணத்தின் பாதி a என்றிவற்றால் கணக்கிடப்படும். h, a-ல் வரும் பிழைகள் முறையே δh, δa எனின், அதற்குத்தக A-ல் ஏற்படும் பிழை என்ன?

மேலும் $a = \frac{\pi}{6}$ எனின், h-ல் வரும் ஒரு நூற்று வீதப் பிழையும், a வில் வரும் $-0^\circ{\cdot}33$ பிழையும் ஒருவாறு ஈடுசெய்து கொள்ளும் என நிறுவுக.

20. முக்கோண ABC-ன் பக்கங்களை அளந்தகாலே a, b, c, சிறிது கூடின் அதற்குத்தக A-ல் கூடுந்தொகை,

$$bc \sin A\, \delta A = -a(\cos C\, \delta b + \cos B\, \delta c - \delta a)$$

என்ற சமன்பாட்டால் அறியலாம் என்று நிறுவுக.

பக்கந்தோறும் ஏற்படும் பிழையின் எல்லைகள் $\pm \mu$ நூறு வீதம் எனின், A-ல் வரும் பிழையின் எல்லைகள் அண்ணளவாக, $\pm 1{\cdot}15\left(\frac{\mu\, a^2}{bc \sin A}\right)$ பாகைகள் என்று நிறுவுக.

9. தொடுவரையும் செங்கோடும்.

(Tangents and Normals)

102. தொடுவரையின் போக்கு (Direction of tangents)

$y = f(x)$ சமன்பாடுடைய வளைவரையில் (x, d) புள்ளியிடத்துத் தொடுவரை x ஆயத்தோடு பிறப்பிக்கும் கோணம் θ ஆயின், அப் புள்ளிக்கண் $\frac{ay}{dx}$-ன் மதிப்பு $\tan\theta$ என்று நான்காவது அதிகாரத்தில் (56 ஆவது பகுதி) நிறுவினோம். இதனைப் பயன்படுத்தி ஒரு வளைவரையின் சமன்பாட்டிலிருந்து வளைவரைகளின் பண்புகளை அறியலாம்.

எடுத்துக்காட்டுகள்

(1) $y = 6 + x - x^2$ என்ற வளைவரையில் $(2, 4)$ இடத்துத் தொடுவரை, x ஆயத்தோடு பிறப்பிக்கும் கோணத்தினைக் காண்க.

$$\frac{dy}{dx} = 1 - 2x$$

$(2, 4)$.ல் $\frac{dy}{dx}$-ன் மதிப்பு $= 1 - 4 = -3$

$$\therefore \tan\theta = -3.$$

ஆகவே, $\theta = 160^\circ\ 34'$

(2) $x^3 + y^3 = 9$ வளைவரையில் $(2, 1)$ என்றவிடத்துத் தொடுவரையின் போக்கு என்ன ?

இச் சமன்பாட்டின் வகைக்கெழு காணின்,

$$3x^2 + 4y^3 \frac{dy}{ax} = 0$$

$$\therefore \quad \frac{dy}{dx} = -\frac{x^2}{y^2}$$

(2, 1) புள்ளியல் $\frac{dy}{dx}$ -ன் மதிப்பு = — 4

ஆகவே, தொடுவரை x ஆயத்தோடு கூடி $\tan^{-1}(-4)$ பிறப்பிக்கும்.

103. ஆதி (origin) வழியாக ஒரு வளைவரை செல்லின் அவ்விடத்து $\frac{dy}{dx}$ -ன் மதிப்பிலிருந்து அதன் உருவத்தினைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக (1) $y^2 = 4ax$ வளைவரை ஆதி வழியாகச் செல்லும். இங்கு $\frac{dy}{dx} = \frac{2a}{y}$.

